விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 11 வியாழக்கிழமை (24.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# இராணுவ தேவைக்காக இருபது ஏக்கர் காணி!

## ஓமந்தையில் சுவீகரிக்கப்படவுள்ளது




ஓமந்தை சோதனைச்சாவடி அமைந்துள்ள இறம்பைக்குளம் மக்கள் குடியிருப்பைச் சேர்ந்த 16 குடும்பங்களுக்குச் சொந்தமான காணியே இவ்வாறு கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அதற்குப் பொறுப்பான அதிகாரியிடமிருந்து காணி உரிமையாளர்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டிருப்

(வவுனியா)

**வவுனியாவுக்கு வடக்கேயுள்ள ஓமந்தை சோதனைச்சாவடியைச் சூழ்ந்துள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான 20 ஏக்கர் காணியை இராணுவத்தின் தேவைக்காக எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.**

பதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்திருக்கின்றார்.

இது குறித்து தமக்கு காணி உரிமையாளர்கள் முறையிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் காணிகள் கடந்த 1953 ஆம் ஆண்டு அரசினால் வழங்கப்பட்டதாகவும், அதற்குரிய காணி உறு

20 ஆம் பக்கம் பார்க்க..

## பொது பல சேனா - ரிஷாத் மோதல்!



(கொழும்பு)

கடும்போக்கு பௌத்த பிக்குகளுக்கும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கும் இடையேயான மோதல் போக்கு மேலும் வலுத்து வருவது போலத்

20 ஆம் பக்கம் பார்க்க..

## இளைஞர்கள் கழுத்தில் சயனைட்; இதுவே சுமந்திரனின் தேவை

### கூட்டமைப்பை சாடுகிறது தே.சு.முன்னணி

(கொழும்பு)

தமிழ் இளைஞர்களின் கழுத்தில் மீண்டும் சயனைட் குப்பிகளை தொங்கவிடுவதே சுமந்திரன் போனறோரின் தேவை என தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கில் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கிலேயே விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் என்ற நாடகத்தை நடிக்க ஆரம்பித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையில் எந்த பயங்கரவாத அமைப்புகளும் இல்லை எனவும் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பும் முடிவுக்கு வந்துவிட்டதாகவும் சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் ஏற்றுக்கொண்டுள்ளது போல் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் புலிகளின் பயங்கரவாதம் முடிவுக்கு வந்தது என்பது உண்மை.

ஆனால், விடுதலைப் புலிகளின் அரசியல் முன்னணியான தமிழ்த் தேசியக் கூட்டமைபபு கடந்த 5

20 ஆம் பக்கம் பார்க்க..

## வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுக்கு இலக்காகி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த யாழ்.சுன்னாகம் பகுதியைச்சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மல்லாகம் பகுதியில் வாள வெட்டுக்கு இலக்கான சுன்னாகம், சூராவத்தையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான தவனேஸ்வரன் நிருபன் (வயது- 30) என்பவரே கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று புதன்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை நள்ளிரவுவேளை குறித்த நபர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரண்டு நபர்களால் இவர் மீது வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டது.

இதில் படுகாயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலை

20 ஆம் பக்கம் பார்க்க..

## இளம் யுவதியை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழில் 21 வயதுடைய இளம் யுவதியொருவர் காணாமல் போயுள்ளார் என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமற்போனவர் யாழ்.கந்தர்மடம் அன்னசத்திரலேனைச் சேர்ந்த மகேஸ்வரதாஸன் சுதர்ஷனா (வயது -21) என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் தனது வீட்டில் தனிமையிலிருந்த போது பிரஸ்தாப யுவதி காணாமல் போயுள்ளதாகவும் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## தாக்குதலுக்குள்ளான கைதி நேற்றைய தினம் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலை காவலாளியால் தாக்கப்பட்டு உடற்சுகவீனமுற்று வைத்திசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சிறைச்சாலைக் கைதியொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வாகன மோசடி வழக்கொன்றில் யாழ்.நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட கொழும்பு களனியினைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் செட்டியார் (வயது 56) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த விளக்கமறியல் கைதியினை கடந்த வாரமுதல் நாளில் யாழ்.சிறைச்சாலை காவலாளி ஒருவர் கைதியின் கைகளில்விலங்கு

20 ஆம் பக்கம் பார்க்க..

சைப்பிரசில் படிக்க மாதம் ஒரு இலட்சம் வரை உழைக்க வெறும் ஐந்து இலட்சம் மட்டும் போதும்

ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க, மாதம் 1 இலட்சம் வரை உழைக்க 6 பேருக்கு மட்டும் அரியவாய்ப்பு
ஆண் பெண் இருபாலாரும் பறக்கலாம்.
40 வயது வரை விண்ணப்பிக்கலாம்

மொரீசியஸ் நாட்டில் படிக்க உழைக்க வெறும் ஆறு இலட்சம் மட்டும் போதும்
40 வயது வரை விண்ணப்பிக்கலாம்

(யாவும் நிபந்தனைகளுடன்)



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 4993502
www.thisaivisa.com

## சர்வதேசத்தை ஏமாற்றவே புலி நாடகமாடுகிறது அரசு

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

சர்வதேச விசாரணைகளிலிருந்து தப்பித்து வடக்கில் இராணுவ பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அரசாங்கம், புலிப் பயங்கரவாதம் என்ற நாடகத்தை நடிக்க ஆரம் பித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.


அப்பாவி தமிழ மக்கள்மீது அரசாங

19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இனத்தின் அழகு கல்வியில்தான் மிளிர்கிறது

## மறந்து விடாதீர்கள் என்கிறார் முதலமைச்சர்



(யாழ்ப்பாணம்)

எமது இனத்தின் அழகு கல்வியில்தான் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. அதனை எத் தருணத்திலும் நாம் மறந்து விடக்கூடாது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கட்டடங்கள் ஒரு கல்லூரியை ஆக்குவதில்லை. அதில் கடமையாற்றும் ஆசிரியர்களும், கல்வி கற்றும் மாணவ சமுதாயமுமே அந்தக் கட்டடங்களை உயிர் உள்ளவையாக மாற்றுகின்றார்கள். ஆசிரியர்கள் தமது ஆக்கபூர்வமான சேவைகளில் ஈடுபடாவிட்டால், மாணவ சமுதாயம் கல்வியில் அலட்சியம் காட்டத் தலைப்பட்டால் அந்தக் கட்டடங்கள் வெறும் கட்டடங்களாகவே இருக்கும் என்பதை நாங்கள் மறந்துவிடக் கூடாது.

ஒரு காலகட்டத்தில் வெளிச்சம் இல்லாமல் இருளில் போத்தல் இலாம்பு வெளிச்சத்தில் வாழ்ந்து கல்வி கற்று வந்தவர்கள் நீங்கள், அன்று எவ்வாறு மன உறுதியோடு, கடப்பாட்டோடு கல்வி கற்றீர்களோ அதே மன உறுதியோடு இந்த அழகான சூழலில் நீங்கள் தொடர்ந்து கல்வி கற்க வேண்டும். எமக்குத் தரப்படும் அனுசரணைகளை நாம் சிதைக்காது சின்னாபின்னப்படுத்தாது சிறந்த முறையில் பாவித்து நன்மை பெற ஒத்துழைக்க வேண்டும். சில கல்லூரிகளின் கட்டட திறப்பு விழாவுக்குச் சென்று வந்துள்ளேன். இது நான் அரசியலுக்கு வரமுன். சில காலங்களின் பின்னர் அதே இடத்திற்குப் போகும்போது கேட்பர் அற்று, பராமரிப்பு அற்று அந்தக் கட்டடங்கள் இருப்பதை அவதானித்துள்ளேன். அப்பேர்ப்பட்ட ஒரு நிலைமை உங்களுக்கு ஏற்படாது என்பதில் எனக்குச் சந்தேகம் எதுவுமில்லை.

காரணம் நடைமுறையில் இருக்கும் கல்லூரிக்கே புதிய கட்டடங்கள் தரப்பட்டுள்ளன. ஆனால் அக்கட்டடங்களின் உள்ளே நடைபெறும் பாடங்கள், கற்கை, கல்வி புகட்டல் யாவையும் சிறந்து விளங்க வேண்டும் என்றே உங்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றேன். அடிக்கிற கைதான் அணைக்கும் என்ற பாட்டைக் கேட்டிருப்பீர்கள்.

சில காலத்தின் முன்னர் உங்கள் யாவரையும் அடித்த கைகளே இந்தக் கட்டடங்களை உங்களுக்குத் தந்துள்ளன. அவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் நட்ட ஈடாக அவர்கள் தர வேண்டிய கடப்பாடு உடையவர்கள். ஆனால் உங்கள் கல்வியை மறந்து விடாதீர்கள், பாரம்பரியங்களை மறந்துவிடாதீர்கள், கொள்கைகளை மறந்துவிடாதீர்கள், குறிக்கோள்களை மறந்துவிடாதீர்கள்

எமது இனத்திற்கு இது காறும் அழகு சேர்த்ததே கல்விதான். அதை மறந்து விடாதீர்கள். சில தருணங்களில் சொகுசு வாழ்க்கை, சுகமான சூழல் ஆகியன எமது குறிக்கோள்களில் இருந்த எம்மை இறக்கிவிடப் பார்ப்பன. அதற்கு இடமளிக்காதீர்கள்.

என்றும்போல் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி யாழ்.குடாநாட்டின் ஏன் முழுநாட்டினதும் முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாகப் பரிண மிக்க வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்கின்றேன் என்றார். (செ-4)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

24.04.2014

பிறப்பு 01 . 12 . 1944

இறப்பு 25 . 03 . 2014



அமரர்

### கந்தையா வேலுப்பிள்ளை

அஞ்சாத நெஞ்சும் அறம் தவறாத வாழ்வும் அன்பும் எஞ்ஞான்றும் அணியாகக் கொண்ட எம் தந்தாய் மண்மீது புகழோடு வாழ்ந்தாய் இன்று எமை விட்டு விண்மீது உறைகின்ற சிவனோடு கலந்தாய் மெழுகாக உன் வாழ்வையாக்கி எமக்கு ஒளி தந்த முழுதான தெய்வம் நீ. அடிபோற்றி பணிகின்றோம் அப்பா இன்றோடு ஒரு திங்கள் ஆச்சு எமை விட்டுச் சென்று நின்றெங்கள் இதயத்தில் வாழ்வாய் பணிகின்றோம் உனையே.

இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

அம்பன், குடத்தனை.

(சி-7143)

இங்ஙனம் குடும்பத்தினர்



## தவறவிடப்பட்டுள்ளது

தர்மவேல் தர்மசீலன் என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் மாலு சந்திக்கும் கலிகைச் சந்திக்கும் இடையில் 21.04.2014 திங்கட்கிழமை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- (6210)

0773933666, 0772844278


## சான்றிதழ் வழங்கலும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் சமூக ஒருமைப்பாடு (MULTICULTURAL INTERACTIVE SESSION) தொடர்பான கருத்தமர்வும், கலந்துரையாடலும் மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை 25-ம் திகதி வெள்ளிக்கிழமை 2.30 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து அடுத்தநாள் 26-ம் திகதி (சனிக்கிழமை) அன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 2 மணிவரை கலை நிகழ்வுகளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதாகவும் இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறும் அந்நிகழ்வின் சிரேஷ்ட இணைப்பாளர் கலாநிதி A.S சந்திரபோஸ் அறிவித்துள்ளார். (செ)


## மன நிறைவுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



மோகனதாஸ் சுவாமி

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி மோகனதாஸ் சுவாமி அவர்களுக்கு 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை பாரம்பரிய சுதேச வைத்திய பிரதி அமைச்சர் அவர்களால் மோகனதாஸ் சுவாமியின் மக்கள் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி "லங்கா இரத்தின ஜோதி" எனும் விருது ஆச்சிரம பூசை அறையில் வைத்து வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு சந்நிதியான் ஆச்சிரமம் சிறப்புற்று ஓங்கி மேன்மேலும் மக்கள் பணி செய்ய மனநிறைவுடன் பாராட்டி வாழ்த்தி மகிழ்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

என்றும் வாழ்த்தும் அன்பு நெஞ்சம் - சிவ.ஆறுமுகசாமி J.P
[அகில இலங்கை சமாதான நீதிவான்] குடும்பம்
No:- 42, "ஜெகா பவனம்"
கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(சி-7136)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-7134)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER



## நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் நெல்லண்டை - தும்பளை

### பிறந்தநாள் வாழ்த்தும் பொன்விழாவும்



### சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள்

எமது குருவழிகாட்டி சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் அவர்கள் இன்று (24.04.2014) தனது 50-வது பிறந்த நாளை கொண்டாடும் இவ்வேளை அவரை எமது வெளியீட்டுக் கழகத்தின் சார்பில் நெல்லண்டை பத்திரகாளி, வீரமாகாளி துணைக் கொண்டு இன்னும் பல்லாண்டு வாழ்ந்து பணி செய்ய வாழ்த்துவதுடன் எதிர்வரும் 04.05.2014 ஞாயிறு மு.ப 10.30க்கு மலர் வெளியீட்டுடன் கூடிய எமது குருவுக்கான பொன்விழா ஆனது தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.நந்தகுமார் தலைமையில் எமது வட மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு த.குருகுலராஜா அவர்கள் பிரதம விருந்தினராய் கலந்து சிறப்பிக்க, அமைச்சின் செயலாளர் உயர் திரு.சி. சத்தியசீலன் அவர்கள் சிறப்பு விருந்தினராய் கலந்த மகிழ, கலாநிதி கலாமணி அவர்களது வெளியீட்டுரையுடன் கௌரவ விருந்தினர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசியர் எஸ்.சிவலிங்கராசா ஆகியோரது உரைகளுடன் சிறப்புற இடம்பெறவிருக்கிறது என்பதையும் தங்களுக்கு அறியத்தருவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

(சி-7141)

த.இராமச்சந்திரன் தலைவர் | வே.நந்தகுமார் செயலாளர் | க.தினேஸ் பொருளாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரை

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றுவரும் பேரறிஞர்களின் நினைவுப் பேருரை வரிசையில் முதலாவதாக நடைபெறவுள்ள பேராசிரியர் க.கைலாசபதி நினைவுப்பேருரை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் உப அதிபர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் நல்லாசிரியனே ஞானவிளக்கு எனும் தொனிப்பொருளில் நினைவுப் பேருரையினை நிகழ்த்துவார். (2)


## அவுஸ். சென்ற 25 பேர் திருப்பி அனுப்பி வைப்பு

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்கு சென்ற 25 பேரை நேற்று முன்தினம் அந்தமான் தீவிலிருந்து அகதிகள் தொடர்பான சர்வதேச அமைப்பினால் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள்அனைவரும்கிளிநொச்சி, யாழ்ப்பாணம், களுத்துறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் நடவடிக்கை

## தென்கொரிய தூதுவரிடம் ஜனாதிபதி உறுதியளிப்பு



**காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தென்கொரியாவின் சிறப்புத் தூதுவரும், அந்நாட்டின் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான மியுங் ஹ்வான் தலைமையிலான குழுவினருடன் அலரிமாளிகையில் நடத்திய சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அபிவிருத்தி விவகாரங்களைப் பொறுத்தவரை தெறகை விட வடக்கிற்கே தான் அதிக முன்னுரிமை கொடுத்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி மஹிந்த, வடக்கிற்குச் சென்று நிலைமைகளை நேரில் அறிந்து கொள்ளுமாறு தென்கொரிய சிறப்புத் தூதுவரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவடைந்த பின்னர் இலங்கை அனைத்துத் துறைகளிலும் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளதாக தென்கொரிய சிறப்புத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை சமூக மயப்படுத்தியமை மற்றும் போரின் போது இடம் பெயர்ந்தவர்களை விரைந்து மீளக் குடியேற்றியமை என்பன போருக்குப் பின்னரான காலத்தில் இலங்கை கண்டுள்ள முன்னேற்றத்திற்கு இரண்டு உதாரணங்கள் என்று மியுங் ஹ்வான் குறிப்பிட்டார்.

வடமாகாணசபைத் தேர்தலை நடத்தியமை மற்றும் காணாமற் போனவர்கள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார். இதன்போது காணாமற் போனோர் குறித்த எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தான் ஆணைக்குழுவின் அறிக்கையை எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கையுடன் ஒத்துழைப்பையும் வலுவான இருதரப்பு உறவுகளையும் பேணுவதற்கு தமது அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதை மியுங் ஹ்வான் மீண்டும் வலியுறுத்தினார்.

அபிவிருத்திக்காக இலங்கை அரசுக்கு ஆகக்கூடிய உதவியைச் செய்ய கொரியா தயாராக உள்ளதாகவும் அவர் கூறினார். (2)

## குருபூசையும் இறுவெட்டு வெளியீடும்

யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் இறுவெட்டு வெளியீடும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் சு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சிறப்பு விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சைவ பரிபாலனசபைத் தலைவரும் ஓய்வுநிலை மாவட்ட நீதிபதியுமான இ. வசந்தசேனன், யாழ். வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ். பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்விற்கான ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார் நிகழ்த்துவார். இந்நிகழ்வின் தொடக்க உரையை ஓய்வு நிலை அதிபர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை நிகழ்த்த வெளியீட்டு உரையை சைவ பரிபாலன சபை செயலாளரும் வித்தியாலய பழைய மாணவருமான இரா. செல்வவடிவேல் ஆற்றுவார். நூலின் ஆய்வுரையை யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் என். விஜயசுந்தரம் ஆற்றுவார். (2)

## இலங்கை செய்திகளை உள்ளடக்கி சொல்ஹெய்ம் நூல் வெளியிடவுள்ளார்

இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகியவற்றுக்கு இடையில் தன்னூடாக பரிமாறிக் கொள்ளப்பட்ட சகல கடிதங்கள் மற்றும் செய்திகளை உள்ளடக்கி இலங்கைக்கான முன்னாள் நோர்வேயின் சமாதான பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் நூல் ஒன்றை வெளியிடவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சியிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் தலைமையிலான ஆட்சியின் போதும் இலங்கையின் சமாத்தான செயற்பாடுகளில் சொல்ஹெய்ம் அனுசரணையாளராக செயற்பட்டார்.

அப்போது அரசு மற்றும் விடுதலைப் புலிகளுக்கு இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்ட சகல தகவல்கள் மற்றும் கடிதங்களை இந்த புத்தகத்தில் உள்ளடக்கப் போவதாக சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

நோர்வேயின் முன்னாள் அமைச்சரான எரிக் சொல் ஹெய்ம், தற்போது அந்நாட்டில் இருந்து இயங்கி வரும் பொருளாதாரம், ஒத்துழைப்பு, அபிவிருத்தி அமைப்பின் அபிவிருத்தி தொடர்பான உபகுழுவின் தலைவராக இருந்து வருகிறார்.

அத்துடன் ஜென்வா மனித வுரிமை ஆணைக்குழு, இலங்கையில் இடம் பெற்றதாக கூறப்படும் மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் நடத்தும் சர்வதேச விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (2)

## தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணிபிரதேசசெயலகபிரிவில் உள்ள கட்டைக்காடு பிரதேசத்தில் ஜே/433 கிராம சேவையாளர் பிரிவில் மட்டும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க தேசிய ரீதியாக சுனாமிக்கான ஒத்திகை நிகழ்வொன்று நடைபெறவுள்ள தாக யாழ். மாவட்ட அரசாங்க அதி பர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார். (2)

## மேற்பார்வையாளர்களுக்கு இலவச பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொறியியலாளர் சங்க வடமாகாண கிளையும் யாழ். முகாமையாளர் சம்மேளனமும் இணைந்து ஹொல்சிம் லங்கா பிறைவேற் லிமிற்றற் (Holcim Lanka (pvt) Ltd) நிறுவன அனுசரணையுடன் நடத்தும் வேலைத்தள மேற்பார்வையாளர்களுக்கான இலவச பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இலங்கை வட மாகாண பொறியியலாளர் சங்க செயலாளர், பொறியியலாளர் என்.நந்தரூபன் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறியானது தொடர்ச்சியாக 10 சனிக்கிழமைகள் (40 மணித்தியாலங்கள்) பிற்பகல் 2 மணி தொடக்கம் 6 மணிவரை நல்லூர், கமத்தொழில் சேவைகள் வீதி, இல-17, யூரோவில் மகா நாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரிகளுக்கான அடிப்படைத் தகைமைகளாக நிர்மாண சார் கற்கைநெறி ஒன்றை பூர்த்தி செய்தவராகவோ அல்லது கற்றுக் கொண்டிருப்பவராகவோ இருப்பதுடன் அரச நிறுவனங்களில் அல்லது ICTAD அனுமதி பெற்ற தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவராகவோ இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் யூரோவில் மகா நாட்டு மண்டபம், #17, கமத்தொழில் சேவைகள் வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 7012 அல்லது 07738805 90 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்படுகிறது. (2)

## இன்றைய இராசி பலன்

**24.04.2014**

(சித்திரை 11, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
தசமி முன்னிரவு 7.55 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 1.46 மணிவரை
இராகுகாலம் 01.30- 3.00 மணிவரை
சுபநேரம் 07.30-9.00மணிவரை
திருநாவுக்கரசர் குருபூசை

வளவன்

**மீனம்** சோம்பலை விலக்குவது நல்லது, சயன சுகக் குறைவான நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், உறவினர்களின் கருத்துகளுக்கு கோபப்படுவதை தவிர்ப்பது நல்லது.

**மேடம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**இடபம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** எதிர்பாராத வகையில் சில செலவுகள் ஏற்படலாம், தொழிலில் சரீரப் பிரயாசை காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களிலில் முன்னேற்றம் ஏற்படும்.

**கும்பம்** வெகுமானங்கள் கிடைக்கப் பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**கடகம்** பிறருக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**மகரம்** எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், மனச்சஞ்சலங்கள் கூடும்.

**சிம்மம்** மனோ தைரியமுண்டு, குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**தனுசு** மனோ தைரியமுண்டு, நற்கீர்த்தி ஏற்படும் நாள், முயற்சிகள் எளி தில் கைகூடும், உடன்பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** மனச்சஞ்சலங்கள் கூடும், உறவினர் வருகையுண்டு, வாகன சுகமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, வளர்ச்சி கூடும் நாள்.

**கன்னி** கடன் பகைகள் திடீரென வசூலாகலாம், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், சத்துரு ஜெயமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தின நிகழ்ச்சி வேலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தொழிலாளர், விவசாயிகள் உள்ளிட்ட தமிழ் பேசும் மக்களின் 2014 ஆம் ஆண்டுக்கான மே தின நிகழ்ச்சிகள் மே முதலாம் திகதி தென்மராட்சி சாவகச்சேரியில் நடத்தலாம் எனக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதையடுத்து அதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா அறிவித்துள்ளார்.

மே முதலாம் நாள் கூட்டம், ஊர்வலம் என்பன சிறப்புற நடை பெறுவதற்கு அணி திரட்ட வேண்டிய ஒழுங்குகளின் பொருட்டு கூட்டமைப்புத் தலைமை, பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக்கான முன்னோடிக் கூட்டங்களை யாழ்ப்பாணத்திலும் சாவகச்சேரியிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் மே தின அறிக்கை பிரகடனங்கள் பற்றியும் கருத்தறிய வேண்டும்.


நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் இதற்கான ஒழுங்குகள் நடைபெற வேண்டும். அதற்கான ஒரு செயலணியையும் உருவாக்க வேண்டும். இதன் பொருட்டு தங்களின் ஒத்துழைப்புடன் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் நடவடிக்கையையும் அறியத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதே தினம் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச மட்ட மேதினக் கூட்டம் அக்கராயன் பிரதேசத்தில் காலை 9 மணி முதல் 11 மணி வரை மணியங்குளம் பகுதியில் நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)



நன்றி-மிரர்

# பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புக்குழு நேற்று யாழ்ப்பாணம் விஜயம்







இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் (National Defense University) பிரதிநிதிகள் குழுவொன்று நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் 21 பேரை உள்ளடக்கிய இந்தக்குழுவினர் யாழ்.பலாலியிலுள்ள பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகத்திற்கு வருகை தந்து யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தக்குழுவிற்கு அந்நாட்டின் பாகாப்பு தரப்பைச்சேர்ந்த மேஜர் ஜெனரல் நௌஏல் இஸ்ராயீல் கொக்கார் தலைமையில் 21 போதனாசிரியர்கள் மற்றும் மாணவ அதிகாரிகளைக் கொண்ட இந்த பிரதிநிதிகள் குழுவினர் யாழ்.கட்டளைத் தளபதியை சந்தித்த பின்னர் யாழ். நகரத்திற்கு விஜயம் செய்தனர்.

இதன்போது யாழ். துரையப்பா விளையாட்டரங்கம் மற்றும் யாழ்.கோட்டை ஆகியவற்றையும் சென்று இந்தக்குழுவினர் பார்வையிட்டிருந்தனர். இதேவேளை, யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கான விஜயத்தை இந்த க்குழுவினர் இறுதி நேரத்தில் இடைநிறுத்தி யிருந்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு கடந்த மாதம் பாகிஸ்தான் நாட்டின் கூட்டுப்படைகளின் தலைமையதிகாரி வருகைதந்திருந்த நிலையில் தற்போது பாகிஸ்தான் நாட்டின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை சேர்ந்த பிரதிநிதிகள் வருகைதந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# பின்தங்கிய பிரதேசங்களுக்கு செல்ல 45 வயதினருக்கு அனுமதியில்லை

## வ.மா.கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

பின்தங்கிய பிரதேசங்களில் கடமையாற்றாத ஆசிரியர்கள் இரண்டு வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டு வரும் நிலையில் 45 வயதுக்கு மேற்பட்டவர்களை பின்தங்கிய பிரதேசங்களுக்கு அனுப்பப்போவதில்லை என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் வட மாகாணக் கல்வி அமைச்சருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர்களிற்கான பற்றாக்குறை அதிகமாகவுள்ளது.

ஆனால் யாழ். மாவட்டத்தில் மேற்படி பாட ஆசிரியர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். இதனால் யாழ்ப்பாண ஆசிரியர்களை கிளிநொச்சிக்கு அனுப்புவதற்குத் தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை கல்வியியற் கல்லூரியிலிருந்து அடுத்த மாதம் வெளியேறவுள்ள ஆசிரியர்களை வன்னிப் பிரதேச பாடசாலைகளுக்கு உள்வாங்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

அத்துடன் ஆசிரியர் உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட 509 பேர் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தரவுள்ளார்கள். அவர்களையும் விசேட அனுமதியின் அடிப்படையில் உள்வாங்க இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் பரிசளிப்பு விழாவும்

திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் திருமுறை மனனப் போட்டி பரிசளிப்பு விழா இன்று மாலை 5.15 மணிக்கு ஆலய மண்டபத்தில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தரும், பண்ணிசைப் புலவருமான வ.சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கவுள்ளார். கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற திருமுறை மனனப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களினது பெயர் விபரங்கள் வருமாறு,




பாலர் பிரிவு

1ஆம் இடம் பி.ஆகாஷ்வரசர்மா (காரைநகர் கிழவன் காடு கலா மன்றம்), 2. ஆம் இடம் அ.துஷியந்தா(யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), 3ஆம் இடம் ஸ்ரீ.பூர்வஜா (யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)

கீழ்ப்பிரிவு

1ஆம் இடம் ம.ஜதுசன்(காரைநகர் கிழவன்காடு கலா மன்றம்), 2ஆம் இடம் க.கஜேந்தினி(காரைநகர் கிழவன் காடு கலா மன்றம்), 3ஆம் இடம் கி.ஆர்த்திகா(காரைநகர் கிழவன் காடு கலா மன்றம்) (2)

# பத்திரகாளி அம்பாள் கும்பாபிஷேகம்

உடுப்பிட்டி இமையாணன் நாவலடி திடல் பத்திரகாளி அம்பாள் புனர் நிர்மாண வேலைகள் மிகத் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன.

இதற்கமைய எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை மஹாகும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இந் நிலையில் பரிவார மூர்த்திகளான பிள்ளையார், முருகன், ஆஞ்சநேயர் சுவாமிகளுக்கான ஆலய பீடங்களும் அமைக்கப் பட்டு வருகிறது.

எனவே மகாகும்பாபிஷேகம் மிகத் துரித கதியில் இடம்பெற இருப்பதால் ஒத்துழைப்பு வழங்குமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (2-60)

# பாலம் புனரமைக்கப்படுவது எப்போது? பயணிப்போர் கேள்வி எழுப்புகின்றனர்

கரணவாய் பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் உள்ள ஆயுர் வேத வைத்தியசாலைக்கு செல்லும் பாதையில் பாலம் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வைத்தியசாலைக்கு செல்லும் பாதை நீண்ட காலமாக மண் அகழ்வு செய்யப்பட்ட நிலையில் பாலம் போடுவதற்கான செயற்பாடுகடந்த வருடம் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் இச் செயற்றிட்டத்தின் கீழ் பல இடங்களின் பகுதிகளுக்கு பாலம் அமைக்கப்பட்ட நிலையில் இவ் வைத்தியசாலையில் பாதைக்கு இதுவரை காலமும் பாலம் அமைக்கப்படவில்லை.

இதனால் இப் பாதையின் ஊடாக வைத்தியசாலை செல்லும் முதியவர்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி வருகின்றனர்.

சில சமயம் பள்ளத்தில் முதியவர்கள் விழுந்தெழும்பிய சம்பவங்களும் நடந்தேறியுள்ளது.

எனவே வைத்தியசாலைக்கு எந்தவித சிரமமும் இன்றி போக்குவரத்தினை மேற்கொள்ள குறித்த பாலத்தினை வெகு விரைவில் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர். (2-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புத சுகமளிக்கும் பெருவிழா

### இயேசு வாழ்வு தருகிறார்

இயேசுவின் தழும்புகளால் குணமானீர்கள் - 1 பேதுரு 2:24

**இடம் :**
**கட்டவேலி கரவெட்டி (வடமராட்சி)**
**மெதடிஸ் ஆலய வளாகம்**

**காலம் : ஏப்ரல் 25,26,27**
**மாலை 4.30 மணி முதல்**
**7.00 மணிவரை**

- பாவ சாபத்தில் இருந்து விடுதலை.
- பில்லி சூனிய பிசாசின் கட்டுகளில் இருந்து விடுதலை.
- கண்ணீர் கவலையில் இருந்து விடுதலை.
- குடும்பப் பிரச்சினைகளில் இருந்து விடுதலை.
- பிள்ளையில்லாத மலட்டுத் தன்மையில் இருந்து விடுதலை.

**தேவ செய்தியாளர்கள்**

Pas. சாம் (கனடா)

Pas. ஞானம் அம்புறோஸ் ( திருகோணமலை)

(சி-7130)

**அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்!**

தொடர்புகளுக்கு
0777162084, 0776594473, 0772310503, 0777495619


# சட்டவிரோத பயணம் மேற்கொள்ள முயன்ற பங்களாதேஷியர்கள் கைது

ஐரோப்பிய நாடுகளுக்கு சட்ட விரோதமாக செல்லும் நோக்கில் இலங்கைக்கு வந்திருந்த 41 பங்களாதேஷ் நாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியான லிபிய விசாவை தயாரிப்பதற்காக அவர்கள் இலங்கைக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. கைதானவர்களில் ஒருவர் ஆட்கடத்தலுடன் தொடர்புடையவர் என்று இலங்கை குடிவரவுத்துறைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்கள் தலா 7 இலட்சம் ரூபாய் வரையில் ஆட்கடத்தல்காரருக்கு வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதான அனைவரும் தற்போது மிரியானை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (2)

# உள்நாட்டு தீர்வுத் திட்டத்தை இலங்கையில் எட்டுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்

## அமெரிக்க செனட்டர்கள் தெரிவிப்பு

இலங்கையில் உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்றை எட்டுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென சில அமெரிக்க செனட்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்திற்கு அமெரிக்காவும் சர்வதேச சமூகமும காத்திரமான ஆதரவினை வழங்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற கால சம்பவங்கள் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் போது நாட்டின் இறைமைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுயாதீன விசாரணைகளுக்கு ஆதரவளிக்குமாறு முன்னதாக 11 செனட்டர்கள் கோரியிருந்தனர். தற்போது இந்த எண்ணிக்கை 17 ஆக உயர்வடைந்துள்ளது. யுத்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வரவேற்கப்பட வேண்டியது என செனட்டர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜோன் கொரயன், ஓரின் ஹாட் டிச், ஜோன் பாராசோ, ரோய் புலூரட், ஜோன் மான்சின், ஜெப் செசியன்ஸ், ஜோன் பூஸ்மான், மைக் க்ராபோ, சூச்ன் கொலின்ஸ், மைக் என்ஸீ, பெட் ரொபர்ட்ஸ், ரிம்ஸ்கொட், டான் கோட்ஸ், ரொஜர் விக்கர், ஜிம் இன்ஹோப்பீ ஆகியோர் இவ்வாறு உள்நாட்டுப் பொறிமுறைமைக்கு ஆதரவளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (2)


## உடன் தேவை

உங்கள் வீடுகளில் உள்ள பழைய புத்தகங்கள், கொப்பி, காட்போட் மற்றும் பிளாஸ்ரிக் வகைகள் அனைத்தும் உங்கள் வீடுகளுக்கு வந்து பணம் தந்து பெற்றுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:-**
(6207) **077 0789476**



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

MEDIA RESOURCE AND TRAINING CENTRE (MRTC)

The Media Resource and Training Centre is a joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden.

Applications are invited from suitable candidates for the post of Technical Officer (On Contract) at the Media Resource and Training Centre, University of Jaffna up to 10th May 2014.

**Qualifications**

a. Three (3) G.C.E (Advanced Level) passes in one sitting
And
b. At least two years experience in Printing Eletronic Media, related to Audio, Video recording and editing

The age limit is 18-35 years

**Salary:** Rs.22,370/- (All inclusive and fixed per month)

**Selection:** By Practical Test and Interview

**General Conditions:**

This is a full- time assignment initially for a period of one year from the date of commencement of the assignment. The assignment is renewable if the services rendered and work performance during the tenture of assignment is satisfac tory.

The appointee will become a contributor to the employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute to EPF and the Employees Trust Fund.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments. University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self- addressed stamped envelop 23x 10 c.m.in size.

Application for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.**

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

**Registrar**
2014.04.23

(C-7135)



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 8.25 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc / Surveyor, Engineer
தொ.இ: B/3001

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: 54.5 செவ் 7 இல்
தகைமை/தொழில்: A/L /ஆயுர் வேத வைத்தியர், சோதிடர் (சுவிஸ்)
எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்ற, வாழ்விழந்தோரும் ஏற்றுக் கொள்ளப்படும், சைவபோசணம் மிகமுக்கியம்
தொ.இ: B/3003

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 26 உயரம்: 5'8"
தகைமை/தொழில் A/L / வியாபாரம் (UK – PR)
தொ.இ: B/3004

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரோகினி 4
கி.பா: 20.75 சூரி செவ் 11 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BFA பட்டதாரி / எழுதுவினைஞர்
தொ.இ: B/3005

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 61 செவ் 8 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: CIMA / உதவிக் கணக்காய்வாளர்
தொ.இ: G/3002

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 43 செவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc / கணிய அளவையியலாளர்
தொ.இ: G/3006

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 29.25 செவ் 2 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc / முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ: G/3009

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா: 22 .5 சூரி செவ் 2 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பொறியியலாளர் (சிவில்)
தொ.இ: G/3010

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 90 | 80 |
| தக்காளி | 40 | 30 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 30 | 40 |
| கோவா | 30 | 20 | 35 | 40 |
| கரட் | 90 | 60 | 80 | 100 |
| பூசணி | 20 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 45 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80-90 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 120 | 120 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 40 | 60 |
| பயற்றங்காய் | 40 | 50 | 40 | 40 |
| லீக்ஸ் | 60 | 60 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 80 | 50 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 25-40 | 60 | 80 | 100 |
| போஞ்சி | — | 140 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 90 | 100 | 110 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 120 | — | 80 |

# கசினோ சட்டத்திற்கு எதிராக ஆதரவு திரட்டும் முயற்சிகளில் எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

அரசாங்கம் இன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ள கசினோ தொடர்பான மூன்று யோசனைகளின் போது, அதற்கு திருத்தங்களை முன்வைக்க ஐக்கிய தேசியக்கட்சி தயாராகி வருகிறது.

கசினோ தொடர்பான யோசனை இன்று சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பான விவாதம் இன்றும் நாளையும் நடத்தப்படவுள்ளன.

இதன்போது எதிர்க்கட்சியின் சார்பில் திருத்தங்களை முன்வைக்க நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய மற்றும் ஜோன் அமரதுங்க ஆகியோர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

கசினோ என்ற பெயரை பயன்படுத்தாது புதிய யோசனையின் கீழ் அரசாங்கம் கசினோவையும் பாரிய ஹோட்டல் திட்டங்களில் உள்ளடக்கியுள்ளது என்று ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஏற்கனவே இந்த யோசனையில் சூதாட்டம், விநோத வசதிகள் என்ற சொல் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் தற்போது அதற்கு பதிலாக இணைந்த வசதிகள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கசினோ சட்டத்திற்கு எதிராக ஆதரவு திரட்டும் முயற்சிகளில் எதிர்க்கட்சிகள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தந்திரோபாய அபிவிருத்தி சட்டத்தின் கீழ் அரசாங்கம் மீளவும் கசினோ சூதாட்ட மையங்களை அமைக்க அனுமதியளிக்க முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கசினோ சட்டத்தை நாடாளுமன்றில் தோற்கடிக்கச் செய்ய ஐக்கிய தேசியக் கட்சி, சிறு கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம் சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சட்டத்திற்கு எதிராக சகல எதிர்க்கட்சிகளும் வாக்களிக்கத் திட்டமிட்டுள்ளன.

சிறுபான்மை கட்சிகள், தேசியவாதம் பேசும் கூட்டணி கட்சிகள் ஆகியவற்றை சட்டத்திற்கு எதிராக வாக்களிக்கச் செய்யும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (2)

# மீனவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதில் இழுபறி நிலை

இலங்கை, இந்திய மீனவர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையை எதிர்வரும் மே மாதம் 12, 13 ஆம் திகதிகளில் இலங்கையில் நடத்துவதற்கு வாய்ப்பில்லை என கடற்றொழில் அமைச்சு தெரிவிக்கிறது.

மே மாதம் 14, 15 ஆம் திகதிகளில் வெசாக் பண்டிகை இலங்கையில் மிக விமரிசையாக கொண்டாடப்படுவதால் பேச்சுவார்த்தையை இலங்கையில் நடத்த முடியாது என்றாலும் இந்திய மத்திய அரசு எமக்கு உத்தியோகபூர்வமாக 12, 13 ஆம் திகதிகளில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும் இது வரை அறிவிக்கவில்லை என்றும் குறித்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு தடவைகள் பேச்சுவார்த்தைக்காக திகதி இலங்கையால் அறிவிக்கப்பட்ட பின்னரும் தமிழகம் அதனை நிராகரித்துள்ளதுடன் எட்டு தடவைகள் ஒப்பந்தத்தையும் மீறியுள்ளது.

எனவே, இனிமேலும் இலங்கை தமிழக மீனவர்களிடையே பேச்சுவார்த்தையை நடத்தாமல் அதற்கு முன்னதாக புதுடில்லியில் இலங்கை - இந்தியா சார்பாக நியமிக்கப்பட்ட தலா மூன்று பேர் கொண்ட அரச உயர்மட்ட குழுவின் பேச்சுவார்த்தையை நடத்துவதே சரியானது என கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கை அரசு சார்பாக கடற் றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நிமால் ஹெட்டியாராச்சி, சுஹத கம்லத், அமைச்சின் ஆலோ சகர் சுபசிங்க ஆகியோர் நியமிக்க ப்பட்டனர்.

உயர்மட்ட அதிகாரிகளின் பேச்சுவார்த்தை இலங்கையில் நடத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும் இந்திய மத்திய அரசிடமிருந்து இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை என்றும் கடற்றொழில் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். (2)

# தமிழ்க் கட்சிகள் இந்தியாவிடம் முறையிடுவதை கைவிட வேண்டும்

## அமைச்சர் டியூ குணசேகர வலியுறுத்து

இலங்கையின் தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்தியாவுக்கு முறைப்பாடு செய்வதால் பயன் ஏதும் இல்லை என்று அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் நாட்டில் சுமார் 10 தமிழ்க் கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதே போல முஸ்லிம் கட்சிகளும் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் அந்தக்கட்சிகள் நாட்டின் பிரதான அரசியலில் காத்திரமான பங்கை வகிக்க தவறிவிட்டன. சுதந்திரம் அடைந்த பின்னர் நாட்டில் ஒற்றுமைக்கான காரணிகள் மேம்படுத்தப்படவில்லை.

தேசிய ஒற்றுமை என்பது உருவாகாத காரணத்தினால்தான் நாட்டின் பொருளாதாரம் சீரற்றிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமிழ்க் கட்சிகள், இலங்கையின் உள்ளக பிரச்சினைகளை உள்ளூரிலேயே தீர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இதனைவிடுத்து இந்தியாவிடம் முறையிடும் அரசியலை தமிழ்க் கட்சிகள் கைவிட வேண்டும்.

ஏற்கனவே பண்டாரநாயக்க-செல்வநாயகம், டட்லி- செல்வநாயகம் மற்றும் ஜே.ஆர் - ராஜீவ் உடன்படிக்கைகள் யாவும் செயலிழந்து போனமைக்கு அந்த உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படாமையே காரணம் என்று அமைச்சர் கூறினார்.

சுதந்திரத்துக்கு முன்னர் இலங்கையில் தமிழ் காங்கிரஸ் மாத்திரமே செயற்பட்டது. எனினும் இன்று 10 தமிழ்க் கட்சிகள் இயங்குகின்றன.

எனினும் அவற்றினால் உரிய முனைப்புக்களை உள்ளூரில் மேற்கொள்ள முடியாமை கவலைக்குரியது என்று அமைச்சர் தெரிவித்தார். (2)

# அவுஸ்திரேலிய அரசு முதலாவது படகை இன்று கையளிக்கும்

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு இரண்டு படகுகளை வழங்குவதாக உறுதியளித்த அவுஸ்திரேலிய அரசாங்கம், இலங்கைக்கு முதலாவது படகை வழங்கவுள்ளது.

சட்டவிரோத அகதிக் கோரிக்கையாளர்களின் கடல் வழிப் பயணங்களை தடுக்கும் நோக்கில் இந்தப் படகு வழங்கப்படவுள்ளது.

அகதிக் கோரிக்கையாளர்கள் கடல் வழியாக அவுஸ்திரேலியா நோக்கிப் பயணிப்பதனை கண்காணிப்பதற்கு இரண்டு படகுகளை வழங்குவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

இதன் ஓர் கட்டமாக முதலாவது படகை அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கவுள்ளது.

படகு கொழும்புத்துறைமுகத்தைச் சென்றடைந்தவுடன் படகு இலங்கைக்கடற்படையினரிடம் இன்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்படவுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு இந்த படகு பயன்படுத்தப்படவுள்ளது. (2)

# குருத்துவப் பணியில் நாற்பதாவது மைல்கல்லில் அருட் கலாநிதி யஸ்ரீன் ஞானப்பிரகாசம் அடிகளார்



அருட்கலாநிதி யஸ்ரீன் ஞானப்பிரகாசம் அடிகளார் தமது குருத்துவப்பணியின் 40 ஆவது ஆண்டு நிறைவை இன்று கொண்டாடுகிறார். 40 ஆண்டுகளுக்கு முன்னர் குருவாகத்திருநிலைப்படுத்தப்பட்ட வியாழக்கிழமையில் அதே ஆலயமான யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் அதேநேரமான மாலை 5 மணிக்கு நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுக்கிறார்.

தனது அர்ப்பண வாழ்வாலும் ஆன்மீக பணியாலும் சாட்சிய வாழ்வு வாழும் அடிகளார் தமது ஆழ்ந்த கற்ற அறிவையும் நீண்ட கால அனுபவத்தையும் தொடர்ந்தும் இன்னும் சிறப்பாக யாழ். மறை மாவட்டத்திற்கு வழங்க வாழ்த்துவோம்.

2007 ஆம் ஆண்டு முதல் யாழ். மறைமாவட்டக்குரு முதல்வராகவும் புனித வளன் கத்தோலிக்க அச்சக அதிபராகவும் பணியாற்றிக் கொண்டிருக்கும் இவரின் வாழ்வையும் பணியையும் அவரின் வாழ்க்கை வழி இரத்தினச்சுருக்கமாக அலசுகிறது இக்கட்டுரை.

சிறந்த ஆளுமை நிலையான நிதானம் - ஆழ்ந்த அறிவு அதற்கேற்ப நிறைந்த வாசிப்பு - நீண்ட அனுபவம்- அமைதியான சுபாவம் என அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு பன்முக ஆளுமையின் வடிவம்தான் அடிகளார்.

1974ஆம் ஆண்டு தமது 25 ஆவது வயதில் யாழ். மறை மாவட்ட முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 1999 ஆம் ஆண்டு தமது குருத்துவ வெள்ளிவிழாவைக் கொண்டாடிய இவர் குருத்துவ பொன்விழாவை நோக்கிய பயணத்தில் 40 ஆவது மைல் கல்லில் நிற்கிறார்.

1974 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம்ஆண்டுவரையிலான40 ஆண்டுகாலக் குருத்துவப்பணியில் ஏறக்குறைய 31 ஆண்டுகளைக் கல்விபணிக்கே அர்ப்பணித் துள்ளார்.

இவர் 1990 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 12 அரச பாடசாலைகளின் கொத்தணி அதிபராகப் பணியாற்றியுள்ளார். 2002 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகாலப்பகுதியில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக அடிகளார் பணியாற்றியகாலம் அண்மைக்கால வரலாற்றில் பொற்காலமாகும்.

பாடசாலைக் கல்விப்பணியோடு இணைந்த கல்விப்பணியாக 1982 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை யாழ். பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை வருகை விரிவுரையாளராகவும் 1992 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி மெய்யியற்றுறை வரவு விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் தமது ஆரம்ப குருத்துவக்கல்வியை இலங்கை கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும் (1965-1971) - இந்தியா புனே குருத்துவக்கல்லூரியிலும் (1972-1974) பெற்று பிரிட்டன் பல்கலைக்கழகத்தில் (1979-1980) முதுகலைமாணிப்பட்டத்தையும் பிரிட்டன் சதம்ரன் பல்கலைக்கழகத்தில் (1986-1988) கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இளவாலை மறைக்கோட்ட முதல்வராகவும் - யாழ். மறை மாவட்ட கவுன்சில் அங்கத்தவராகவும் 1992 - 2002 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ். மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுவின் தலைவராகவும் 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். மறைமாவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

தோன்றிற் புகழோடு தோன்றுக என்றவாக்கிற்கொப்பதோன்றப் பணி புரியும் அருட்கலாநிதி யஸ்ரீன் ஞானப்பிரகாசம் அடிகளாரின் பணி தொடர்ந்தும் இன்னும் நிறைவாக யாழ். மறைமாவட்டத்திற்கும் தமிழ் மக்கள் அனைவருக்கும் கிடைக்க இறை ஆசியை வேண்டுவோம்.

அருள்திரு
ரூபன் மரியாம்பிள்ளை,
ஊடக விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர கட்டடத்தை விரைவில் புனரமைக்குக



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் மீள்குடியேற்றப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை புனரமைத்து வழங்கப்படாமையினால் அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த அலுவலகம் யுத்தத்தினால் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த பின்னர் 97 ஆம் ஆண்டு அவ்விடத்திலேயே இயங்கி வந்தது.

எனினும் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியினாலும் இறுதிப் போரினாலும் கட்டடம் முற்றாக சேதமடைந்து அத்திபாரம் மாத்திரமேயுள்ளது.

முல்லைத்தீவு பட்டின கிராம சேவையாளர் பிரிவில் P.W.D சந்தியிலே அலுவலகத்திற்கான 1/4 ஏக்கர் காணியுள்ளது.

இவ் அலுவலகமே மாவட்டத்திலுள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்களையும் மேற்பார்வை செய்து அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்தோடு அனர்த்த காலங்களில் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல், சகல கூட்டுறவு சங்கங்களின் கணக்கறிக்கைகளை கவனித்தல், புதிய சங்கங்களை உருவாக்குதல் போன்ற பணிகளை ஆற்றி வருகின்றது.


இந்நிலையில், குறித்த அலுவலகம் தற்காலிகமாக கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் மணற்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள தனியார் வீடொன்றிலேயே இயங்கி வருகின்றது.

போதிய ஆளணியுள்ள போதும் இடப்பற்றாக்குறை, குடிநீர்வசதியின்மை, பாதுகாப்பு, தளபாடவசதிகள், வாகன தரிப்பிட வசதிகள், வெளி மாவட்ட ஊழியர்களுக்கான தங்குமிடங்கள் இன்மை போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.

அத்தோடு தற்காலிக அலுவலகம் இயங்கும் பகுதி பள்ளமாகவுள்ளதால் வெள்ளப் பெருக்கு ஏற்படும் சூழலும் மழைகாலங்களில் தூவானம் வீசுவதால் பணிகளை ஆற்றுவதில் சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன. கூட்டம் நடத்துவதற்குரிய மண்டபங்களும் இல்லை.

எனவே முல்லைமாவட்ட அரசாங்க அதிபரும் வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் றிசாத் பதியுதீனும் குறித்த அலுவலகத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண் டுமென மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-267)

# சிவநகருக்கு வீட்டுத்திட்ட பதிவுகள் ஆரம்பம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிவநகர் கிராம சேவையாளர் பிரிவுக்கு இந்தியன் வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான பதிவுகள் நேற்று முன்தினம் முதல் இடம்பெற்று வருகின்றது.

இந்தியன் வீட்டுத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதன்படி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் இதுவரை இந்தியன் வீட்டுத் திட்டத்தினூடாக 3 ஆயிரத்து 649 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு நேப் நிறுவனம் உட்பட ஏனைய திட்டங்களினூடாக 7 ஆயிரத்து 516 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது சிவநகர் கிராமத்திற்கு இந்தியன் வீடு வழங்குவதற்கான பதிவுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-254)




## கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு நடத்தப்படவிருந்த கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக வவுனியா கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.தேன்மொழி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சினால் இன்றையதினம் வவுனியா மாவட்ட கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சருக்கும் பா.டெனீஸ்வரனுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் இச் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதுடன் கூட்டத்திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றார். (9-250)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய நால்வர் கைது

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் கடந்த இரு நாட்களாக மேற்கொண்ட வீதிச் சோதனையின் போது சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற நால்வரை கைது செய்துள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு, மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மணலை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களை வைத்திருக்காத குற்ற ச்சாட்டிலேயே நால்வரையும் கைது செய்ததாகவும் இவர்களை பொலிஸ் பிணையில் விடுவித்ததாகவும் பொலிஸார் கூறினர். (9-250)

# தர்மபுரம் பொதுச் சந்தைக்கான நீர் விநியோகத்தை ஆரம்பிக்குக

(கண்டாவளை)

தர்மபுரம் பொதுச் சந்தையில் நீரின்மையால் வியாபாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கரைச்சி பிரதேச சபையின் கீழுள்ள இப்பொதுச் சந்தையில் நீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

சந்தையில்நீரைப்பெற்றுக்கொள்ள வசதியாக கிணறோ நீர்க் குழாயோ இல்லை.

இதனால் பிரதேச சபையினர் நீர்த்தாங்கிகள் ஊடாக நீர் விநியோகம் செய்து வந்தனர்.

எனினும் இவ்வருடம் முதல் இச் சேவை இடம்பெறாமையினால் வியாபாரிகள் அருகிலுள்ள பாடசாலைக் கிணற்றையே பயன்படுத்தி வருகின்றனர்.

புதிதாக அமைக்கப்பட்ட மீன் சந்தை நீரின்மையால் துர்நாற்றம் வீசுகின்றது.

அத்தோடு மலசலகூடத்தினையும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, நீர் விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-263)

# வாவெட்டியில் கருங்கல் அகழ்வு; இயற்கை சமநிலை சீர்குலைவு

(குருமன்காடு)

ஒட்டுசுட்டான் வாவெட்டி மலையில் சட்ட விரோதமான முறையில் இடம்பெறும் கருங்கல் அகழ்வில் இயற்கை சமநிலை பாதிக்கப்பட்டு வருவதாக வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

குறிப்பிட்ட பகுதியில் நடைபெற்று வரும் கருங்கல் அகழ்வானது சட்ட விரோத அகழ்வு என்று முன்னமே சுட்டிக்காட்டப்பட்டு நிறுத்தப்பட்ட நிலையிலேயே தற்பொழுது மீண்டும் குறித்த இடத்தில் கருங்கல் அகழ்வு நடைபெற்று வருகிறது.

ஒட்டுசுட்டான் வாவெட்டி மலையின் இரு பகுதிகளில் பாரிய அளவில் கருங்கல் அகழ்வு இடம்பெறுவதை கடந்த வருடம் நவம்பர் மாதமளவில் நேரடியாக பார்வையிட்டு குறித்த அகழ்வானது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆழத்தை விட அதிக ஆழம் வரை நடைபெறுவதை சுட்டிக்காட்டியதை அடுத்து அந்நடவடிக்கையானது நிறுத்தப்பட்டிருந்தது.

வாவெட்டி மலையில் இருந்து 1/2 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள மக்களின் வீடுகளிலும் சுற்றுப்புற சூழல் கட்டடங்களிலும் வெடிப்புக்கள் ஏற்படுவதற்கும் நில அதிர்வுகள் ஏற்படுவதற்கும் கற்கள் உடைக்கப்படும் போது பரவும் புகை மண்டலத் தூசி மக்கள் குடியிருப்புக்களை சூழ்ந்திருந்து அவர்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதற்கும் தேசத்தின் வளங்கள் மீது மக்கள் மீது பொறுப்பற்ற பார்வையை செலுத்துகிற அதிகார மையங்களின் முறையற்ற அனுமதி வழங்கல்களே காரணமாக அமைகிறது.



2013-11-25 அன்று, சட்டவிரோத கருங்கல் அகழ்வை நேரடியாக பார்வையிட்ட போது...

இந்தகருங்கல்அகழ்வினால்அண்மையிலுள்ள வீடுகள், கிணறுகள், [illegible] களிலும் வெடிப்புகள் ஏற்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திடம் கேட்டபோது, கருங்கல் அகழ்வு இடம்பெறும் குறித்த இடங்கள் விரைவில் பார்வையிடப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென உதவி பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது.

இவ்விடயம் வடமாகாண விவசாய அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் வளங்கள் சூறையாடப்பட்டு அவை சிதைக்கப்படும் பின்னணியில் செயற்படும் ஒருசில அதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகம் கூடிய விரைவில் தடுத்து நிறுத்தப்படுமெனவும் கூறினார். (9-6-250)

## வீதிகள் புனரமைப்பு

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாஞ்சோலை பொது வைத்தியசாலையின் உள்வீதி மற்றும் வைத்தியர் விடுதிக்கான வீதி என்பன வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்விருவீதிகளும் 600 மீற்றர் நீளம் கொண்டவையாகும்.

வைத்தியசாலைக்குச் செல்லும் உள்வீதி புனரமைக்கப்பட்டு வருவதால் நோயாளிகளும் நோயாளிகளை பார்வையிடச் செல்லும் பொதுமக்களும் மாற்று வழியை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-250)

## சுனாமி ஒத்திகை நிகழ்வு இன்று

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி ஒத்திகை நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை வண்ணாங்குளம் இராயப்பர் ஆலயவளாகத்தில்நடைபெறவுள்ளது.

இவ் ஒத்திகை நிகழ்வின் போது முல்லைத்தீவு பட்டின கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி எச்சரிக்கை கோபுரத்திலிருந்து ஒலி எழுப்பப்படவுள்ளதால் அப் பகுதியிலுள்ள மக்கள் வேறிடங்களுக்குச் செல்ல தேவையில்லையென முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எச்.ரி. ஹாமினி பிரியந்த அறிவித்துள்ளார். (9-267)

## பயிர்ச் செய்கை கூட்டம்


(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தின் கீழான சிறு போக பயிர்ச் செய்கை கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புதுமுறிப்பு விக்னேஸ்வரா பாடசாலை மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, இக் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளையும் மற்றும் கமக்கார அமைப்புக்களையும் கலந்து கொள் ளுமாறு கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (9-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளது உயர்வில் முன்பள்ளி ஆசிரியர்களது ஆளுமை சார் அணுகுமுறைகள்



கருணாமூர்த்தி பத்மகாந்தன்
ஆசிரியர்
கிளி/ஸ்கந்தபுரம் இல.2 அ.த.க பாடசாலை

(கடந்த வாரத் தொடர்ச்சி...)

அக்கறை என்கின்ற போது உள ரீதியாகவும் உடல்ரீதியாகும் கற்றல் நிலைமைகள் ரீதியாகவும் நீங்கள் சிறந்த அக்கறை காட்ட வேண்டும்.

தகாத சொற்பிரயோகங்கள், கடின சொற்பதங்கள், ஏளனச் சொற் பதங்கள் என்பன பிள்ளைகளது உளத்தினைப் பாதிப்படையச் செய்யும், தண்டனை, சுகா தாரச் சீர்கேடு, பிற நண்பர்களால் ஏற்படுத்தும் உடல்காயங்கள், உங்களது கவனயீனம் மற்றும் சிரத்தையற்ற நடத்தைகளால் பிள்ளைகளது உடலில் ஏற்படும் காயங்கள் என்பன உங்களையும் பிள்ளைகளையும் பாதிக்கும்.



அடுத்து பிள்ளைகளது கற்றல் சார்ந்த செயற்பாடுகளில் கவனமெடுத்து அக்கறையுடன் செயற்படுங்கள்.

பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் தாங்கள் முன்பள்ளிக்குச் செல்ல வேண்டும் வீட்டில் நிற்கமாட்டோம் என்று அடம்பிடித்து கற்க செல்லும் அள விற்கு உங்களது கற்றல் செயற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளும் அமைதல் வேண்டும்.

"பிள்ளைகள் தாங்கள் கற்கிறோம் என்று தெரியாமலே கற்றுக்கொள்ளும் அளவிற்கு விளையாட்டு, கதைகள், பாடல்கள், நடிப்பு, நவீன கற்றல் முறைகள் போன்ற இதர செயற்பாடுகளுடன் இணைந்ததாக கற்றல் செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துங்கள்.

எக்காரணத்தைக் கொண்டும் ஆசிரியர்கள் முன்பள்ளி பாலகர்களைத் தனியே விட்டு விட்டு வெளியே செல்லக் கூடாது. மகிழ்ச்சிகரமான கற்றலிலும் சரி விளையாட்டு முற்றத்தில் விளையாட்டில் ஈடுபடும் போதும் சரி நீங்கள் உடனிருந்து உற்று நோக்க வேண்டும். பொதுவாகக் கூறின் பிள்ளைகளது ஒவ்வொரு அசைவுகளையும் நீங்கள் அவதான மாகக்கவனித்து வழிநடத்துதல் உங்களது பொறுப்பாகும்.

எல்லாக்குழந்தைகளையும் பாரபட்சமின்றி நடத்துதல் வேண்டும்.

ஆசிரியரைப்பொறுத்தவரை பாரபட்சம் என்ற எண்ணம் அவரது அகராதியில் இருக்கக் கூடாது. அந்தக் குறை இருந்தால் தயவு செய்து அதனை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

வகுப்பறையில் மாணவர்களைக் கையாளும் போது அந்த எண்ணம் அறவே இருக்கக் கூடாது.

குடும்ப அந்தஸ்து, பொருளாதார நிலை, வர்க்கநிலை, பிள்ளையின் கற்கும் ஆற்றல் போன்றவற்றினடிப் படையில் பாரபட்சம் காட்டாதீர்கள். இவையெல்லாம் மனிதனுடன் நீடித்து நிற்கும் ஒன்றல்ல. இவை கால சூழ்நிலையில் மாற்றமடையக் கூடியன.

எனவே நீடித்து நிற்பதென்பது உங்கள் கைகளால் வளர்த்தெடுக்கப்பட்ட குழந்தைகள் நாளை சிறந்த அறிவாளிகளாக, உலகத்தலைவர்களாக, தொழில் வல்லுநர்களாக உயர்ந்து நாட்டிலும் உலகத்திலும் பிரதிபலித்து நிற்பதே நிலையானதும் பெருமைதரக் கூடியது மாகும்.

ஆகவே இந்நிலையில் குழந்தைகளை நீங்கள் உருவாக்குவதற்கு பாரபட்சம் என்பது ஓர் தடைக் கல்லாக அமைந்து விடுகின்றது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

முன்பள்ளிக் குழந்தைகளில் ஒரு சிலரைப் பொறுத்தவரையில் அவர்களது சுகாதாரப் பழக்கவழக்கங்கள், வார்த்தைப் பிரயோகங்கள், [illegible] தெரியும் நோய்கள் [illegible] ஆசிரியர்களாகிய உங்களையும் ஏனைய மாணவர்களையும் பாதிப்பதாக அமையக்கூடும்.

அச் சந்தர்ப்பங்களால் அப்பிள்ளைகளுடனான இடைவினையுறவில் இடைவெளியேற்பட சந்தர்ப்பங்கள் உண்டு. அந்த இடத்தில் நீங்கள் ஒன்றுமே அறியாத அப்பாலகர்கள் மீது வெறுப்புடன் பாரபட்சம் காட்டலாகாது.

இந்த விடயத்தில் பெற்றோருடன் அணுகி அப்பிரச்சினைகளிற்கு தீர்வு காணும் ஆற்றலுள்ளவர்களாக உங்களை உருவாக்கி கொள்ளுதல் வேண்டும்.

பிள்ளைகளுடனான உறவைக் கட்டியெழுப்பி அன்பு, ஆதரவு, கருணை, உதவி ஆகியவற்றைச் சீராக அமைத்துக் கொள்ளல்.

குழந்தைகள் அதிகம் எதிர் பார்ப்பது அன்பு மற்றும் ஆதரவு, பாதுகாப்பு, பிறரது உதவிகள் போன்றவற்றையாகும்.

வீட்டுச் சூழலில் இருந்து புதிய தொரு சூழலுக்குள் நுழைந்த சிறு பிள்ளைகள் என்பதால் அவர்களது தேவைகளை உணர்ந்து சிறப்பான முறையில் அத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய ஆற்றலுள்ளவர்களாக முன்பள்ளி ஆசிரியர்கள் திகழ்தல் வேண்டும்.

உளவியல் அறிஞரான மாஸ்லோவின் தேவைக்கொள்கையை எடுத்து நோக்கின் உடலியல் தேவை, அன்பு, காப்பு, கணிப்பு சுயதிறனில் நிறைவுத் தேவை போன்ற அம்சங்கள் ஒரு மனிதனுக்கு அவசியம். அந்நிலையில் குழந்தைகளைப் பொறுத்தவரையில் இத்தேவைகள் மிக மிக அவசியமாகின்றது. அத் தேவைகள் படிப்படியாக நிறைவு செய்யப்படுகின்ற போது அடுத்த படியாகவுள்ள [illegible] எழும் என்று கூறுகின்றார். ஒரு தேவையாயின் நிறைவு செய்யப்படாதவிடத்து மற்றைய தேவை எழாது என்றும் இதன் காரணமாக உடல் உளப் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் நேரிடுகின்றது.

எனவே முன்பள்ளி ஆசிரியர்கள் தங்களை நாடிவரும் பிள்ளைகளிடத்தே உடலியல் தேவைகளான பசி, தாகம், மலசலம் கழித்தல் போன்ற தேவைகளை நிறைவுசெய்வதுடன் அன்பு காட்டி, பாதுகாப்பு வழங்கி, கருணை காட்டி, தேவையான இடங்களில் உதவிகளை வழங்கி அவர்களைக் கையாளுகின்ற போது பிள்ளைகள் ஆசிரியர்களை நேசிப்பர். பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான உறவு தூய்மையானதாகவும், பலம் வாய்ந்ததாகவும் அமைத்து கொள்ளும்.

ஒவ்வொரு பிள்ளையையும் நன்றாக அறிந்திருத்தல் வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் பிள்ளையை அறிதல் என்பது மிக மிக அவசியமானதொன்றாகும்.

அதிலும் சிறு குழந்தைகளைக் கையாளும் முன்பள்ளி ஆசிரியர்கள் ஒவ்வொரு பிள்ளைகளைப் பற்றிய தகவல்களையும் மிக ஆழமாகவும், அகலமாகவும், உண்மையுடனும் அறிந்திருத்தல் வேண்டப்படுவதொன்றாகும்.

இவ்வாறு பிள்ளை பற்றிய தகவல்களை அறிந்து வைத்திருக்கின்ற போது சகல நிலைகளிலும் பிள்ளையைக் கையாள்வதற்கும் அதற்கான பரிகார நடவடிக்கைக்கும் இலகுவாக அமைந்து விடுகின்றது.

இந்நிலையில் பிள்ளைகளது பிறப்புத் தொடக்கம் தற்போதுள்ள நிலை வரையான தகவல்களை அறிந்து ஆவணப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இங்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனியான பதிவேடுகள் கையாளப்படுதல் அவசியம். பிள்ளைகளது பிறப்பு நிலை, வளர்ச்சி நிலைமைகள், பிள்ளைகளது உடல் உள நிலைமைகள், பிள்ளைகளிடமுள்ள விசேட இயல்புகள், உடல் சார் நோய்கள், குடும்ப நிலைமைகள், போன்ற பிள்ளை சார் அம்சங்களை அறிந்து இப்பதிவேட்டில் பதிந்து பேணுதல் முன்பள்ளி ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய ஓர் செயற்பாடாகும்.

தேவையேற்படும் போது பெற்றோர்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்க உங்களுக்கு இலகுவாகின்றது.

இப்பதிவேட்டைத் தொடர்ச்சியாகப் பேணி பாடசாலைக்கு செல்லும் போது பிள்ளையின் பெற்றோரிடம் அதனைக் கையளித்தல் சிறப்பான செயற்பாடாகும்.

இவ்வகையில் ஒவ்வொரு பிள்ளையையும் சிறப்பாக அறிந்து கொள்ளும் ஆற்றல் என்பது முன்பள்ளி ஆசிரியர்களது ஆளுமைப்பண்புகளின் பாற்பட்டது.

### முடிவுரை

எனவே வீட்டுச்சூழலில் தாம் கற்கின் றோம் என்று அறியாமலே கற்றலில் ஈடுபட்ட பிள்ளைகள், முறைசார் நிறுவன முன்பள்ளி கல்வி அமைப்பினுள் உட்படுத்தப்படுகின்றனர்.

இவர்களிடம் கல்விக்கான சிறந்த உத்வேகம், ஆற்றல், விருப்பு என்பவற்றை வளர்க்கும் நோக்கில் முன்பள்ளி ஆசிரியர்களாகிய உங்களது கைகளில் நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்படுகிறார்கள்.

எனவே அப்பெற்றோர்களதும், அச்சிறுவர்களதும் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் நீங்கள் என் பதை மறந்து விடலாகாது.

நம்பிக் கைக்குத் துரோகமிழைத்தவர்கள் என்ற குற்றத்திற்கு ஆளாகாது அவர்களது நம் பிக்கைகளை நனவாக்குவதற்கு நீங்கள் உழைக்க வேண்டும்.

அதற் காக உங்களது கற்றல் மற்றும் பிள்ளைகளுக்கான கற்பித்தல் நிலைமைகளிலும் பண்புசார் அணுகுமுறைகளிலும் சிறந்த உயர்தர மாற்றத்தினை ஏற்படுத்தல் வேண்டும். இதற்காக இங்கே மேற்சொன்னது போன்ற பல்வேறு அம்சங்களினை உங்களிடத்தில் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இதன் வழி உங்களைச் சிறந்த ஆளுமையுள்ளவர்களாக உருவாக்கி கொள்ள முடிகின்றது. (முற்றும்)



## கல்வித் தரிசனம்

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....இருள் மாயை, மருள் மாயை இருவரும் சாபம் பெற்றதற்கு மோகினிப்பாறை இருக்கிறது. கோரக்கரும் பிரம்ம முனிவரும் யாகம் நடத்தியதற்கு வாதமேடு இருக்கிறது. அதுபோலவே சிவபெருமான் காட்சி தந்ததற்கு ஏதேனும் நினைவுச் சின்னம் இருக்கிறதா என்ன?

கேள்வியைச் சாதாரணமாகத்தான் கேட்டேன். ஆனால் உடன் வந்த துறவி அசரவில்லை. வாருங்கள் என்று காட்டினுள்ளே இருந்த மரத்தடி மேடையருகே அழைத்துச் சென்றார்.

அங்கே சிறியதொரு சிவலிங்கம் வழிபாட்டுடன் காணப்பட்டது. எங்களுக்கு முன்னே வந்த யாரோ அதற்கு அபிஷேகம் செய்து மாலை அணிவித்து வணங்கிச் சென்றிருக்க வேண்டும். லிங்கத்தின் எதிரே சிறியதொரு நந்தியும் காணப்பட்டது.

இங்கேதான் இறைவர் சித்தர்களுக்குக் காட்சியளித்தார் என்றார் துறவி.

மற்ற. லிங்கங்களைப் போலில்லாமல் நெற்றிக்கண் செதுக்கப்பட்ட அபூர்வ லிங்கமாக அது காட்சியளித்தது. பக்தர்களுக்கு வழிகாட்டியாக வரும் நாகராஜுக்குத் தெரிந்த விடயங்களைவிட அதிகமாக அந்தத் துறவிக்கு; தெரிந்திருக்கிறது. எல்லாம் இறைவனின் கருணைதான்.

முட்செடிகள் நிறைந்த பாதைக்கு நடுவே சதுர வடிவமான மேடையில் காணப்பட்ட அந்த லிங்கேஸ்வரரை வணங்கிவிட்டு மிகுந்த சிரமத்திற்கிடையில் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.

### ஏடு எழுத்தாணிப் பாறை

மாலை சூரியன் மளமளவென்று மேற்கில் இறங்கிக் கொண்டிருந்தான்.



நாகக்கன்னி

பொழுது சாய்கிறது. வேகமாக நடவுங்கள். இருட்டிவிட்டால் காட்டைவிட்டு வெளியேறுவது ரொம்பக் கஷ்டம். விரைவுபடுத்திக் கொண்டிருந்தார் வழிகாட்டி.

பள்ளமான காட்டைவிட்டு மேட்டுப் பாங்கான இடத்தை நோக்கி எங்கள் பயணம் தொடர்ந்தது.

"அதோ தெரிகிறதே, அதுதான் சித்தர் பீடம். அதனை அருகில் சென்று பார்க்க இயலாது. இங்கிருந்தே தரிசித்துக் கொள்ளுங்கள்" என்றார் வழிகாட்டி.

அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் இரு பாறைகள் ஒன்றையொன்று அணைத்தாற்போல இருக்க அவை இரண்டுக்கும் இடையே சிறிய இடைவெளியும் காணப்பட்டது. அந்த இடைவெளியில் தான் அகத்தியர் அமர்ந்து தியானம் செய்தாராம்.

சரி வாருங்கள் என்று வழிகாட்டி அழைக்க, புறப்படத் தயாரான எங்களை இடைமறித்து, நன்றாக உற்றுக் கேளுங்கள். காற்றில் ஓங்கார ஒலி

**ஆன்மீகம் 101**

கேட்கிறது என்றார் துறவி.

நாங்கள் உற்றுக் கவனித்தோம். துறவி காட்டிய் பாறை இடுக்கில் காற்றின் ஒலி பட்டு வித்தியாசமான சங்கொலி போல்... ஓங்கார நாதம் கேட்டுக் கொண்டிருந்தது. இதன்ன சித்தர்களின் மந்திர உச்சாடனம் என்கின்றனர்.

சிறு வயதில் தந்திக் கம்பங்களுக்கிடையே காது வைத்துக் கேட்டதில் உய் என்று வந்த காற்றின் ஒலி ஞாபகத்திற்கு வந்தது.

ஓங்கார நாதத்தை அனுபவித்த வண்ணமே நடையை எட்டிப் போட்டோம்.

இப்போது மேடு ஒன்றில் ஏறிக் கொண்டிருந்தோம். பிடிமானம் ஏதுமில்லாததால் உட்கார்ந்து உட்கார்ந்து மேலே நகரத்தான் முடிந்தது.

அப்பாடி... ஓரளவு நடக்கும்படியான பாதை தெரிந்தது. ஆனால் உயரமான இடத்தில் காற்று வீசியது. காற்றின் வேகம் எங்களைப் பிடித்துத் தள்ளுவது போலிருக்கவே நிதானமாகக் கொம்பு ஊன்றி நடந்தோம்.

அதோ தெரிகிறதே, அதுதான் ஏடு எழுத்தாணிப் பாறை. நாகராஜ் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தோம்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**20**

...நடைபாதைக்கென்று அமைக்கப்பட்ட பூங்காவின் உள்வட்டத்தில் நிமிர்ந்து பார்த்தால்- நீங்கள்.

நீங்களா? நீங்கள் தானா? நிஜம் தானா?

நிஜம்தான்.

பக்கத்தில் உங்கள் பால்ய நண்பர்.

ஓ வாக்கிங் வந்து கொண்டிருக்கிறீர்கள்.

என்னால் நம்பவே முடியவில்லை.

நாலுமுழக் கதர்வேட்டி- உடம்பின் முக்கால் பாகம் ஆக்கிரமிக்கும் அரைக்கைச் சட்டை- கறுப்பும் வெள்ளையுமாய் பிரம்பு மாதிரி ஒரு கைத்தடி- காலில் வெள்ளை ஷூ- நீங்கள்தான்; நீங்களேதான்.

ஓடிவந்து பேசிவிட ஆசைதான்.

உங்களைப் பார்த்துவிட்ட சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ளத் தவிப்புத்தான்.

ஆனால் அதை நீங்கள் விரும்பியிருப்பீர்களா?

உங்கள் தனிமையில் கல்லெறியும் தவறை நான் செய்யலாமா?

உங்கள் தவத்தைக் கலைக்க எனக்கென்ன உரிமை?


எனக்கு நானே கயிறு கட்டிக் கொண்டு உங்களைக் காதலோடு பார்த்திருந்தேன்- சர்க்கரை வியாதிக்காரன் லாலா கடையைப் பார்ப்பது மாதிரி.

பூங்காவின் பறவைகளே! புரிகிறதா?

பச்சை மரங்களே! பார்த்தீர்களா?

தமிழ்நாட்டின் ஒரு பெரிய அறிவாளி இதோ பொடி நடையாய்ப் போய்க் கொண்டிருக்கிறார் என்று புலம்பிக் கொண்டேன்.

ஒரு காலத்தில் ஒரு முதலமைச்சர் தன்னைச் சந்திக்க விரும்புகிறார் என்று தெரிய வந்தபோது, சந்தித்து ஆக வேண்டியதென்ன தவிர்த்து விடலாமே என்று தவிர்த்துக் கொண்ட ஒரு தகைமையாளர் இதோ ஒவ்வொரு பத்தாவது நிமிடத்திலும் எனக்குப் பதினைந்தாவது அடி தூரத்தில் போய்க் கொண்டே



எஸ்.ஏ.பி.அண்ணாமலை

யிருக்கிறார்.

முதுமை முத்திரை குத்தியிருக்கிறது.

அசைவுகளில் ஒரு மெல்லிய தள்ளாமை.

காலத்தின் விலாசத்தை எழுதிச் செல்லும் கால்கள்.

மேல் நோக்கிய பார்வை.

ஊன்றுகோலை மட்டும் நீங்கள் ஊன்றி நடக்கவில்லை.

அதைப் பெரும்பாலும் கைக்கோலகவே கருதுகிறீர்கள்.

ஊன்றுகோல் வேண்டுகோள் விடுத்தால்தான் ஊன்றுகிறீர்கள்; இல்லையென்றால் அது ஊன்றுகோல் அல்ல; உங்கள் கற்பனைக்கு அது ஒரு தூண்டுகோல் என்றே தோன்றுகிறது.

வாழ்க்கையில் ரொம்ப தூரம் ஓடி வந்த நுரை உங்கள் நரை.

மூன்றாம் முறை நீங்கள் சுற்றி வந்த போது என் விரதத்தை முடித்துக் கொண்டு ஓடோடி வந்து, உங்களை வணங்கி, குடுவையில் நான் கொண்டு வந்திருந்த காப்பி கொடுத்து உங்களை உபசரிக்க உள்மனது துள்ளியது.

மீண்டும் உங்கள் தனிமை கெடக் கூடாது என்று தவிர்த்து விட்டேன்.

ஆனாலும் நீங்கள் கடந்து போவதையே கவனித்துக் கொண்டிருந்தேன்.

பழைய காதலியை அவள் கணவனோடு பார்த்த காதலன் மாதிரி- தள்ளியிருந்தே தர்ம தரிசனம்.

அந்தி மயங்க- பூங்காவிலிருந்து நீங்கள் போய்விட்டீர்கள்; என் மனசிலிருந்து...?

மண்ணிடம் கொஞ்சம், காற்றிடம் கொஞ்சம், நீரில் கொஞ்சம், வெப்பத்தில் கொஞ்சம் கடன் வாங்கிக் கொண்டுதான் ஒரு விதைகூடத் தன் உறக்கத்தை உதறி விழிக்கிறது.

நானும் ஒரு விதைதான்; கிராமத்து விதை.

ஓரோர் பொழுதில் ஒவ்வொருவர் காற்றாய், நீராய், வெப்பமாய், மண்ணாய் எனக்கு விளங்கியிருக்கிறார்கள்.



நீங்களும்- இதில் ஏதோ ஒன்று எனக்கு.

ஒரு படைப்பாளன் கற்றுக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதை நான் கற்றுக் கொண்டது உங்களிடம்தான்.

கல்வி மனிதனை நவீனப்படுத்துகிறது.

புதுப்புது அறிவு மனிதனைப் புடம் போடுகிறது.

சுவாசிக்கிற வரைக்கும் ரத்தம் சுத்தம் செய்யப்படுகிறது.

வாசிக்கிற வரைக்கும் மனிதன் சுத்திகரிக்கப்படுகிறான்.

இந்த உண்மையை நோக்கி என்னை ஆற்றுப்படுத்தியதில் உங்களை அறியாமல் உங்களுக்குப் பங்கு இருக்கிறது.

உங்களுக்கு என் வணக்கம்.

ஒரே ஒரு சந்தேகம்.

"அந்தப் பூங்காவில் நீங்களும் என்னைப் பார்த்தீர்கள்தானே!"

(தொடரும்)

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

786

## வைஜெயந்தி எடுத்த முடிவு



..."அப்பா! உங்களுடைய அனுமதிஇன்றி, நான்தான் விஜ பனை என்னை சிலை வடிக்கச் சொன்னேன். அதைப்பற்றி உங் களிடம் ஒரு வார்த்தைகூடக் கூறா தது என் தவறுதான்! என் பிறந்த நாளன்று அந்தப்பளிங்குச்சிலையை உங்களுக்குக் காட்டி, உங்களை வியப்பிலும், மகிழ்ச்சியிலும் ஆழ்த் நத் திட்டமிட்டேன். அதற்குள் இந்த அசம்பாவிதம் நடந்து விட்டது. முதலில் நான் செய்த தவறுக்கு என்னை மன்னித்து விடுங்கள்.

அடுத்து, தாங்கள் எனக்கு மணாளனாகத் தேர்ந்தெடுத்திருந்த ஜெயந்தனின் அடாத செயலைப் பாருங்கள்! இப்படிப்பட்ட ஆண்கள் தங்கள் மனைவி எப்போதும் தன் னைச் சார்ந்திருக்க வேண்டுமென்று விரும்புபவர்கள்! மனைவியை பிறர் கண்களில் படாமல் சிறைப்படு த்தி வைக்கும் குணம் உள்ளவர்கள்!

இத்தகைய ஒருவனை நான் மணம்புரிந்துகொள்ளவிரும்பவில்லை. அதேசமயம், விஜயனைப் பாருங் கள்! சிலை செய்யும் விடயம் நமக் குள் ரகசியமாக இருக்க வேண்டும் என்று நான் சொன்னதனால், அத் தனை அடிபட்டும் அவன் வாயைத் திறக்கவில்லை.

இளவரசிதான் சிலை வடிக்கச் சொன்னாள் என்ற உண்மையைக் கூறினால், எனக்கு அவப்பெயர் வந்துவிடுமோ என்ற எண்ணத் தில், ரத்தம் சிந்தி அடிகளைப் பெற் றுக் கொண்டான். தவிர, நான் அவ னுடன் பழகிய இந்த இருபது நாட் களில் அவன் வீரதீரப் பராக்கிரமங் கள் கொண்ட ஓர் உத்தமன் என்று புரிந்து கொண்டேன். நான் திரு மணம் புரிவதானால் அது விஜ யனை மட்டுமே" என்று கூறினாள்.


"ஆனால்... மகளே! நீ... எவ்வாறு அந்த விஜயனை..." என்று தயங்கி யவாறு மன்னர் கேட்டபோது, கிழவி முன்வந்து, "மகாராஜா! உங்களிடம் ஓர் உண்மையைக் கூற விரும்புகிறேன். விஜயன் என் சொந்தப் பேரனில்லை. ஒருசமயம், விஜயபுரி மன்னரின் உறவினர் களே அவருக்கு எதிராக சதிவேலை யில் ஈடுபட்டு கலகம் உண்டாக்க, மன்னர் அப்போது கர்ப்பவதியாக இருந்த ராணியை என்னிடம் பாது காப்பாக அனுப்பி வைத்தார்.

கலகத்தில் மன்னர் இறக்க, பிரசவத்தில் ராணியும் உயிர் துறக்க, அநாதையான விஜயனை நான் வளர்த்து வந்தேன்" என் றாள்.

"என்ன சொன்னாய்? விஜயன் விஜயபுரி மன்னரின் புதல்வனா!

அவர் என்னுடைய நெருங் கிய நண்பர்!" என்று வியப்புடன் கூறிய மன்னர் தன் மகளைப் பார்த்து, "வைஜெயந்தி! ஒரு சிற் பியை எவ்வாறு உனக்குத் திரு மணம் செய்து வைப்பது என்று நான் தயங்கினேன்.

இப்போது அவன் என் நண்ப ரின் மகன் என்று தெரிந்த பிறகு, அவனைத் தவிர வேறு யாருக்கும் உன்னைத் தர இனி சம்மதிக்க மாட்டேன்" என்று குதூகலத்துடன் கூற, வைஜெயந்தி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினாள்.



(முற்றும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

24 04.2014

- 1704 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப் பத்திரிகை "த பொஸ்டன்" நாளிதழ் வெளி யிடப்பட்டது.
- 1877 - ஓட்டோமான் பேரரசு மீது ரஷ்யா போரை அறிவித்தது.
- 1913 - வானளாவிக் கோபுரம் வூல்வேர்த் கோபுரம் நியூயோர்க் நகரில் கட்டப்பட்டது.
- 1915 - ஆர்மீனிய இனப்படுகொலை: கொன்ஸ்டன் ரனபோலில் பல்லாயிரக்கணக்கான ஆர் மேனியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஏனையோர் நாட்டைவிட்டு விரட்டப்பட்டனர்.
- 1955 - இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் ஆசியா, மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 29 அணி சேரா நாடுகளின் உச்சி மாநாடு முடிவுற்றது. குடியேற்றவாதம், இனவெறி மற்றும் பனிப் போர் ஆகியவற்றைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1961 - 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த "வாசா" என்ற சுவீடனின் கப்பல் மீட்டெடுக்கப்பட்டது.
- 1965 - டொமினிக்கன் குடியரசில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.
- 1967 - சோயூஸ் 1 விண்கலத்தில் பயணித்த ரஷ்ய வீரர் விளாடிமிர் கொமரோவ் அவரது குதி தடை திறக்கமுடியாமல் போனதால் உயிரி ழந்தார். இவரே விண்வெளிப் பயணமொன் றில் உயிரிழந்த முதலாவது வீரராவார்.
- 1968 - மொரீசியஸ் ஐ.நாவின் உறுப்பு நாடாகியது..
- 1970 - முதல் சீனச் செய்மதி டொங் ஃபாங் ஹொங் 1 ஏவப்பட்டது.
- 1970 - காம்பியா பொதுநலவாய அமைப்பினுள் குடிய ரசாகியது.
- 1981 - முதலாவது ஐபிஎம் தனி மேசைக் கணினி அறிமுகமானது.
- 1990 - டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் தொலைக் காட்டியை விண்ணுக்குக் கொண்டு சென்றது.
- 1993 - இந்தியாவில் பஞ்சாயத்து அரசுத் திட்டம் அமைக்கப்பட்டது.
- 2006 - நேபாளத்தில் மன்னருக்கு எதிராக இடம் பெற்ற கலவரங்களை அடுத்து 2002 இல் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீள அமைக்க மன்னர் உத்தரவிட்டார்.
- 2007 - பலாலி இராணுவத்தளம் மீது தமிழீழ விடு தலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தின.


### பிறப்புகள்

- 1820 - ஜி. யு. போப், தமிழுக்கு சேவை செய்த அமெர க்கர் (இ. 1908)
- 1845 - கார்ல் ஸ்பிட்டெலர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1924)
- 1934 - ஜெயகாந்தன், தமிழக எழுத்தாளர்.
- 1951 - தம்பிஐயா தேவதாஸ், ஈழத்து எழுத்தாளர்
- 1973 - சச்சின் டெண்டுல்கர், இந்தியத் துடுப்பாட்ட மட்டையாளர்

### இறப்புகள்

- 1960 - மாக்ஸ் லாவுவே, நோபல் பரிசு பெற்ற ஜேர் மனியர் (பி. 1879)
- 1964 - ஜெரார்ட் டொமாக், மருத்துவத்துக்கான நோபல் பரிசினை மறுத்த ஜேர்மானியர் (பி. 1895)
- 2011 - ஸ்ரீ சத்ய சாயி பாபா, தென்னிந்திய ஆன்மிக குரு (பி. 1926)

### ஸ்ரீசத்ய சாயி பாபா



ஸ்ரீ சத்ய சாயி பாபா 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி ஆந்திராவில் உள்ள புட்டபர்த்தி எனும் கிராமத்தில் ஈஸ்வ ரம்மா- பெத்தவெங்கம ராயூ ரட்னாகரம ஆகியோருக்கு 8ஆவது குழந்தையாகப் பிறந்தார். சத்ய சாயி இவர்களுக்கு . சத்ய நாராயண விரதம் இருந்து பிறந்ததால், இவருக்கு **சத்ய நாராயணன** என பெயர் சூட்டினர்.

இவர் தென்னிந்திய ஆன்மிக குரு. இவரது அடியார்களினால் இவர் "இறை அவதாரம்" எனப் போற்றப்படுகிறார் . இவர் ஒரு மதப் பரப்புனரும் சித்தரும் ஆவார். விபூதி தருவித்தல், மோதிரங்கள், சங்கிலிகள், கடிகாரங்கள் போன்ற சிறிய பொருட்களை தருவித்தல் போன்ற இவரது செய்கை களினால் இவரது பக்தர்கள் இறைவனின் அற்புதம் என கருதுகின்றனர். சத்ய சாயி பாபா தனது 14ஆவது அகவையில் சீரடி சாயி பாபாவின் மறு அவதாரம் என கருதப்பட்டார்.

சத்ய சாயிபாபா நிறுவனம் தனது சாயி அமைப்புகள் மூலம் இலவச மருத்துவ நிலையங்கள், பாடசாலைகள், உயர்கல்வி நிலையங்கள், கிரா மங்களுக்கு குடிநீர்த் திட்டம் போன்ற பல சமூகநலத் திட்டங்களை இந்தி யாவிலும் வேறு பல நாடுகளிலும் அறிமுகப்படுத்தி நடத்தி வருகிறது. இவரது ஏறத்தாழ 1200 சத்ய சாயி அமைப்புகள் 114 மையங்களில் உலகெங்கிலும் செயற்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது.

இவரின் வழி நடப்பவர்கள் சுமார் 60 இலட்சம் பேர் (1999 இல்) எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகெங்கிலும் 100 கோடி அடியார்கள் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

84 வயதான சாயி பாபா உடல் நலக்குறைவு, மூச்சுத் திணறல் காரண மாக சத்திய சாயி மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனையில் 2011 மார்ச் 28 ஆம் திகதி சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார்


இவரது உயிர் பிழைப்பிற்காக பக்தர்கள் பிராத்தனைகள் செய்து வந்த னர். இவரது உடல் நிலையில் பெரும் அளவில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்ட மருத்துவ குழு வினர் 24 மணி நேரமும் பாபாவின் உடல் நிலையை கவனித்து வந்த னர்.

இந்நிலையில் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி ஞாயி ற்றுக்கிழமை காலை இந்திய நேரம் 07:40 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2014 - 14.05.2014



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**வசந்த காலத்திற்கு வழிகாட்டும் நேரம்!**

**கவலை இல்லாத வாழ்க்கையை விரும்பும் மிதுன இராசிநேயர்களே!**

கடந்த சில மாதங்களாகவே ஜென்ம குருவின் ஆதிக்கத்தில் சிக்கல்கள் பலவற்றையும் சந்தித்த நீங்கள் புத்தாண்டின் தொடக்கத்தில் புத்துணர்ச்சியோடு செயற்படப் போகிறீர்கள். அத்தனை காரியங்களிலும் வெற்றி கிடைக்க வேண்டுமானால் நவக்கிரகங்கள் நல்ல நிலையில் சஞ்சரிக்க வேண்டும். இல்லையேல் பாதகாதிபதி வலுவிழக்க வேண்டும். சாதகாதிபதி வலுவாக இருக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 6இற்கு அதிபதி செவ்வாயும் வக்ரம் பெறுகிறார். 8இற்கு அதிபதி சனியும் வக்ரம் பெறுகிறார். இரண்டு கிரகங்களும் வேறு இடங்களின் ஆதிபத்யம் பெற்றிருந்தாலும்கூட ருண ரோக ஸ்தானாதிபதியாகவும், இழப்புகளை குறிக்கும் 8ஆம் இடத்திற்கு அதிபதியாக விளங்கும் கிரகங்கள் வலிமை இழக்கும் பொழுது பாயில் படுத்தவர்கள் பம்பரமாய் பணிபுரிவர். நோய்கள் அகலும். நோக்குமிடமெல்லாம் வெற்றி வரும்.

தாயின் உடல் நலம் சீராகும். தந்தையோடிருந்த கருத்து வேறுபாடுகள் ஓரளவு தான் அகலும். இழப்புகளை ஈடு செய்யவும் லாபம் குவிக்கவும் புதிய தொழில் தொடங்கும் திட்டங்களைத் தீட்ட முன்வருவீர்கள். அதற்கு பொன்னான நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். வாங்கிய சொத்துக்களை விற்றுவிட்டோமே, அதை அப்படியே வைத்திருந்தால் நல்ல விலைக்கு போகுமே, என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது புதிய சொத்துக்களை வாங்கிச் சேர்க்கும் வாய்ப்புகள் கைகூடி வரலாம்.

ஜென்ம குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவதால் பிள்ளைகள் வழியில் நல்ல காரியம் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். வீட்டில கெட்டி மேளம் கொட்டுகிற வாய்ப்பு உருவாகலாம். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களுக்கு வேறு இடங்களைத் தேர்ந்தெடுத்து அதில் மாற்றினத்தவர் ஒத்துழைப்போடு அடிக்கல் நாட்டுவிழா நடத்துவீர்கள். இடையூறு சக்திகள் விலகும்.

பார்க்கும் கேதுவின் பார்வை பலத்தால் சோதனைகளை சாதனையாக்கி காட்டுவீர்கள். சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும். அதிக பயணங்கள் ஏற்பட்டாலும் ஆதாயத்திற்கு குறைவிருக்காது. 'ஜென்ம ராமர் வனத்திலே' என்ற சித்தாந்தப்படி ராமர் வன வாசம் சென்ற பொழுது குரு அவரது ராசியிலேயே சஞ்சரித்ததாக சொல்வார்கள். அதே நிலைப்பாட்டில் இப்பொழுது குரு உங்கள் ராசியில் சஞ்சரிப்பதால், வியாழக்கிழமை தோறும் தென்முகக் கடவுள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். உண்மையிலேயே நீங்கள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் உன்னதமான வாழ்க்கை அமையும்.

**மேஷ புதனும், இடப புதனும்!**

சித்திரை மாதத் தொடக்கத்திலேயே, அதாவது ஏப்ரல் 14 அன்று உங்கள் ராசிநாதன புதன் நீச்சத்திலிருந்து விடுபட்டு லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பல நாட்களாக சிந்தித்த காரியங்களை இப்பொழுது செயற்படுத்துவீர்கள். அன்னிய தேச அனுகூலம் கிட்டும். அஞ்சல் வழியில் ஆச்சரியப்படத்தக்க தகவல் வந்து சேரும். எண்ணிய காரியங்களில் வெற்றி பெற எண்ணற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். கண்ணியம் மிக்கவர்கள் உங்களோடு இணைந்து கட்டடம் வாங்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பு செய்வர்.

இடப ராசியில் புதன் சஞ்சரிக்கும் நாள் மே 1ஆம் திகதியாகும். இந்த நேரத்தில் விரயங்கள கொஞ்சம் கூடுதலாகத்தான் இருக்கும். விழிப்புணர்ச்சி இல்லாமல் செய்த காரியங்களில் எதிர்பார்த்த லாபத்தைப் பெறமுடியாது. அரசியல்வாதிகளால் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். ஆதரவுக் கரம் நீட்டுபவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். சேமிப்பை தக்க வைத்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

**மீன சுக்ரனின் சஞ்சாரம்!**


ஏப்ரல் 28ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி உச்சம் பெறும் இந்த நேரத்தில் வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களை கொடுத்துவிட்டுப் புதிய வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும். புத்திர ஸ்தானாதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால் பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பிரச்சினைகளிலிருந்து விடுபடும் இந்த நேரத்தில் அன்னிய தேச யோகம் ஒரு சிலருக்கு உருவாகும். புண்ணயம் சேர்க்க யாத்திரைகளையும் மேற்கொள்வர். இம்மாதம் விநாயகப் பெருமானை வழிபட்டு விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பயணங்கள் அதிகரிக்கும். பண வரவு திருப்திகரமாக இருக்கும். இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடப்பதற்கு உடன் பிறப்புகள் உதவியாக இருப்பர். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். செவ்வாயின் வக்ர நிவர்த்திக்குப் பிறகு மாதக் கடைசியில் மகிழ்ச்சி கொஞ்சம் குறையலாம். கூட இருப்பவர்களையும் கூடப்பிறந்தவர்களையும் அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். பாசத்தின் காரணமாக நீங்கள் ஆசைப்பட்டவை எல்லாம் வாங்கிக் கொடுக்க குடும்பப் பெரியவர்கள் சிபாரிசு செய்வர். வராகி வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

# வசந்த காலத்திற்கு வழிகாட்டும் நேரம்!

## சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**சோதனைகளை சாதனையாக்கும் நேரம்!**

**கலகலப்பாகப் பேசிக் காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்று சொல்லும் கடக இராசி நேயர்களே!**

சித்திரை மாதத் தொடக்கமே உங்களுக்கு சிறப்பாக இருக்கிறது. அத்தனை காரியங்களும் உங்களுக்கு நடைபெற வேண்டுமென்றால் அஷ்டமாதிபதி, மற்றும் ஆறுக்கு அதிபதி வலிமை இழக்க வேண்டும். அந்த அடிப்படையில் இம்மாதத் தொடக்கத்தில் அஷ்டமாதிபதியாக விளங்கும் சனி பகவான் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதே நேரத்தில் உங்கள் ராசிநாதன் 5, 10இற்கு அதிபதியான அங்காரகனுடன் கூடி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்.

எனவே மங்கல ஓசை மனையில் கேட்கும் வாய்ப்பு உண்டு. அரசு வழி அனுகூலங்களும் ஆதாயங்களும் கிடைக்கும் விதத்தில் சூரிய பகவானின் சஞ்சாரம் அமைந்துள்ளது. தனாதிபதி உச்சம் பெற்று சஞ்சரிக்கும் இம்மாதம் வரவு திருப்திகரமாக இருக்க வேண்டும். வங்கிகளின் கடன் உதவியை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு அதுவும் கைகூட வேண்டும்.

அப்படிப்பட்ட ஒரு அமைப்பில் சூரியனின் சஞ்சாரம் இருந்தாலும் அதை பகை கிரகமான சனி பார்ப்பதால் பணம் வந்த மறு நிமிடமே செலவாகி விடும். எனவே தொழிலில் வரும் லாபத்தை துணையாக இருப்பவர்களிடம் கொடுத்து வைக்காமல் வங்கிகளிலும் வளர்ச்சி கருதி வைப்பு நிதியாக வைக்காமல், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவது நல்லது. வாகன மாற்றம் பற்றி இதுவரை சிந்தித்து வந்த நீங்கள் இப்பொழுது தீர்க்கமாக முடிவெடுப்பீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வந்து கொண்டே இருக்கும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் இப்பொழுது விருப்ப ஓய்வு பெறுவது அவ்வளவு நல்லதல்ல. ஓராண்டு கழித்தே அதிலும் குறிப்பாக சனி விலகிய பிறகே ஒரு சில முடிவுகளை எடுக்க வேண்டும். சனி 4இல் சஞ்சரிக்கும் வரை தொடர்ந்து மாருதி வழிபாடும், சனிபகவான் வழிபாடும் செய்து வருவது நல்லது. வெற்றிலை மாலை, அல்லது வடை மாலை அணிவித்து மாருதியை வழிபாடு செய்யலாம். அப்பொழுதுதான் உற்றார், உறவினர்களின் பகை மாறும். ஒத்துழைப்பு செய்யும் நண்பர்களின் எண்ணிக்கை உயரும்.

சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கமும் கூடுதலாக இருப்பதால் ராகு-கேது பிரீதிகள் மற்றும் சர்ப்ப சாந்திகளை செய்வது நல்லது. மாதக் கடைசியில் செவ்வாயின் வக்ர நிவர்த்திக்குப் பிறகு வசந்த காலம் உருவாக வழி பிறக்கும்.

**மேஷ புதனும், இடப புதனும்!**

உங்கள் ராசிக்கு [illegible] ஆகிய இடங்களுக்கு அதிபதியான [illegible]த்தில் சஞ்சரிக்கப் போகிறார். அந்த நிகழ்வு மாதத்தின் தொடக்க நாளிலேயே நடைபெறுகிறது. எனவே இந்த மேஷ புதனின் ஆதிக்கத்தால் தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பங்குதாரர்களுடன் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். சகோதர வழியில் கூட்டுத் தொழில் தொடங்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கு ஏற்படும்.

புதன் 1 ஆம் திகதியன்று இடபத்தில் சஞ்சரிப்பதால் சில நல்ல மாற்றங்கள் உருவாகும். அந்நிய தேசத்திலிருந்து அழைப்புகள் வந்து அலைமோதும். புண்ணிய நிகழ்ச்சிகளுக்காக கொடுத்து உதவுவீர்கள். லாப ஸ்தானத்தில் சகாய, விரய ஸ்தானாதிபதி சஞ்சரிப்பதால் குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்க முன்வருவீர்கள். வடு கட்டும் வாய்ப்பில் இருந்த தடைகள் அகலும.

**மீன சுக்ரனின் சஞ்சாரம்!**

ஏப்ரல் 28 ஆம் தேதி சுக்ரன் மீன ராசியில் உச்சம் பெறப்போகிறார். இதன் விளைவாக இட மாற்றம், ஊர் மாற்றம், இலாகா மாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படலாம். சுக்ர மங்கள யோகம் செயற்படும் இந்த நேரத்தில் பயணங்கள் அதிகரிக்கும். பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். சொத்துப் பத்திரங்களைப் பதிவு செய்யும்போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. குடும்ப உறுப்பினர்களின் குணமறிந்து செயற்படுவதன் மூலமே மன [illegible]. அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு பொறுப்புகளில் மாற்றம் ஏற்படும். இம்மாதம் ஆறுமுகப் பெருமான் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குடும்பத்தில் விரயங்கள் கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் வந்த மறுநிமிடமே செலவாகும். தூர தேசத்திலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ளலாமா, வேண்டாமா? என்று சிந்திப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக கொடுத்துச் செல்வது நல்லது. ஆரோக்கியக் குறையை சரி செய்ய மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள். குழந்தைகளைக் கண்காணித்துக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். மாமன் வழி ஒத்துழைப்போடு மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. விஷ்ணு வழிபாடு விருப்பங்களை நிறைவேற்றும்.

(தொடரும்)

# சோதனைகளை சாதனையாக்கும் நேரம்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழகத் தேர்தலில் தலை தூக்கிய ராஜீவ் வழக்கு

கோடை வெயிலோடு பேச்சாளர்களின் கொப்பளிக்கும் உரைகளும் சேர்ந்து தமிழக தேர்தல் களத்தை உஷ்ணமாக்கியிருக்கிறது. முக்கிய கட்சிகளான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் பிரசார ஹீரோக்கள் வாக்காளர்கள் மனதில் தங்கள் கட்சியின் செயற்றிட்டங்களை அறிவித்துவிட்டார்கள்.



தேசிய ஜனநாயக கூட்டணியோ அவர்களின் செயற்றிட்டங்களை அறிவித்து நாங்கள்தான் இரு திராவிடக் கட்சிகளுக்கும் மாற்று என்று கச்சை கட்சி நிற்கிறார்கள். அ.தி.மு.கவிற்கு முதல்வர் ஜெயலலிதா பிரசாரத்தை வழி நடத்துகிறார்.

தி.மு.கவிற்கு கலைஞர் கருணாநிதி வழி நடத்தினாலும் உள்ளபடி களத்தில் அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கும் (அதாவது நாடாளுமன்றத் தொகுதிகளில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகள்) சுற்றுப்பயணம் செய்து சுறுசுறுப்பாக தேர்தல் பிரசார நாயகனாக நிற்பவர் ஸ்டாலின்தான்.

ஊழல் செய்து, காங்கிரஸுக்கு உறுதுணையாக இருந்த கட்சி தி.மு.க. என்று அக்கட்சியை சாடுகிறார் ஜெயலலிதா. அதே நேரத்தில் வளர்ச்சித் திட்டங்களை முடக்குவார். மத்தியில் நிலையான ஆட்சிக்கு ஆதரவு தரமாட்டார் என்று ஜெயலலிதாவைச் சாடுகிறார் ஸ்டாலின்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியைப் பொறுத்தமட்டில் .பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி சூறாவளி பிரசாரம் செய்தார். ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியோ, மீனவர் பிரச்சினை பற்றியோ பெரிய அளவில் எந்த உத்தரவாதமும் கொடுக்கவில்லை. அக்கூட்டணியில் இருக்கும் வைகோ, ராமதாஸ், விஜயகாந்த் போன்றவர்களுக்கு மைனாரிட்டி வாக்குகளை இழக்கும் சோகத்தில் இருக்கிறார்கள்.

அதேபோல் பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கையை இவர்களால் தற்காத்துப் பேச முடியாமல் தவிக்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஒரே மேடையில் காட்சியளிக்க முடியாத அளவிற்கு கருத்து வேறுபாடுகளுடன் தேர்தல் களத்தில் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பில் சோனியா காந்தி வந்து பேசிவிட்டார். அவர் தி.மு.கவை விமர்சிக்காமல் இலங்கை பிரச்சினையில் தமிழர்களுக்கு இந்தியா செய்த உதவிகள் என்ன என்பதை பட்டியலிட்டுவிட்டு, என் கணவரையே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தியாகம் செய்திருக்கிறேன் என்று உருக்கமாகப் பேசினார். ஆனால், அ.தி.மு.க. அரசைச் சாடிவிட்டுப்போனார்.

தமிழக மீனவர்கள், அவர்களது படகுகளை விடுதலை செய்ய முழு முயற்சி எடுத்தது மத்திய அரசுதான். அதற்கு முட்டுக்கட்டை போட்டது தான் மாநிலத்தில் உள்ள அ.தி.மு.க. அரசு என்று சாடிவிட்டார்.

நாகர் கோயிலில் பேசிய கூட்டத்திற்கு சென்னையில் பதிலளித்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, சோனியா சொல்வது கேலிக்கூத்து, பித்தலாட்டம் என்றெல்லாம் கடும் சொற்களை வீசியிருக்கிறார். கடந்த மூன்று வருடங்களில் காங்கிரஸ் அரசை விமர்சித்தாரே தவிர, சோனியாவை நேரடியாக விமர்சிக்கவில்லை.

ஆனால், இந்த முறை சோனியாவை கடுமையாக சாடியிருக்கிறார். தமிழக மீனவர்கள் விடுதலைக்காக அ.தி.மு.க. அரசுதான் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்று அவர் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் வேளையில், சோனியாவின் இந்தக் குற்றச்சாட்டு கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சோனியாவின் கூட்டத்தில் இன்னொரு முக்கிய அம்சம் இங்குள்ள தி.மு.கவை அவர் விமர்சிக்காதது தான். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஞானதேசிகன் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் தி.மு.கவை சோனியா விமர்சிக்க வேண்டும் என்றே எதிர்பார்த்தார்கள். ஆனால், சோனியா அதற்கு இடம்கொடுக்கவில்லை. குறிப்பாக தேர்தலுக்குப் பிறகு மதசார்பற்ற ஆட்சி அமையத் தான் தி.மு.க. டெல்லியில் முயற்சி எடுக்கும்.

அந்த காரணத்திற்காக காங்கிரஸையே கூட ஆதரிக்கும் என்று தி.மு.க. தலைவர் அறிவித்துள்ள நிலையில், அந்தக் கட்சியை விமர்சிக்கத் தேவையில்லை என்று சோனியா நினைத்திருக்கக் கூடும். காங்கிரஸுக்கு இந்த நாடாளுமன்றத் தேர்தல் முக்கியம் என்றால் தி.மு.கவிற்கு அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தல் முக்கியம். அதனால் இரு தரப்புமே இந்தத் தேர்தல் களத்தில் மோதிக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தொகுதிகளில் போட்டியிடும் கார்த்தி சிதம்பரத்தின் தந்தை நிதியமைச்சர் ப.சிதம்பரம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போன்றோர் தி.மு.கவை விமர்சிக்கத் தவறவில்லை.

இவர்களுக்கு எல்லாம் பதில் சொல்லும் வகையில் பிரசாரத்திற்கு சென்றுள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதி தன் அட்டாக்கை மோடி பக்கமும், ஜெயலலிதா பக்கமும் திருப்பிவிட்டுள்ளார். திராவிட அலை வீசிக்கொண்டிருக்கும் தமிழகத்திற்குள் மோடி அலை எல்லாம் நுழைய முடியாது என்றார்.

அதேபோல் முதல்வர் ஜெயலலிதாவிற்கு எதிரான சொத்துக்குவிப்பு வழக்கில் சாட்சியங்கள் சொன்ன சொத்துப் பட்டியல்களை கூட்டம் தவறாமல் விவாதிக்கிறார். இன்னும் சொல்லப்போனால் ராஜீவ் வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ள சாந்தன், முருகன், பேரறிவாளன் வழக்கில் விரைவில் நல்ல தீர்ப்பு வரும் என்று இந்திய சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சதாசிவம் அறிவித்தார். அதையே கலைஞர் கருணாநிதி கண்டித்துள்ளார். தான் வழங்கப்போகும் தீர்ப்பு பற்றி ஒரு பொது மேடையில் இப்படி உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அறிவிக்கலாமா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ராமநாதபுரம் பிரசாரத்திற்கு வருகிறார் ராகுல்காந்தி. அதற்கு முன்பு பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் வந்து திரும்பிவிட்டார். அவர் மேடைக்கு அருகிலேயே தேர்தல் பறக்கும் படையினர் ஒருவரிடம் இருந்து 8 இலட்சம் ரூபாயை பறிமுதல் செய்தது பரபரப்பை ஏற்படுத்தியது. அத்வானியும் தமிழக தேர்தல் பிரசாரத்திற்கு வருகிறார். இப்படி தலைவர்கள் அனைவரும் ஏப்ரல் 24-இன்று நடக்கும் பிரசாரத்திற்காக தமிழகத்தில் வந்து குவிகிறார்கள். ஏனென்றால், பிரசாரம் முடிகிறது. அதற்குள் அவரவர் கருத்துக்களை வாக்காளர்கள் மனதில் விதைத்துவிட வேண்டும் என்ற முயற்சியில் தமிழகத்தேர்தல் களம் அனல் பறக்கிறது.

இந்தத் தேர்தலில் குறிப்பிடத்தக்க விடயம் இலங்கை தமிழர் பிரச்சினை முன்னிறுத்தப்படவில்லை. அதற்காக போராடிய இயக்கங்கள் அதுபற்றி வாய் திறக்கவும் இல்லை. முன்பு இலங்கை தமிழர் பிரச்சினையை மையமாக வைத்து காங்கிரஸுடன் இருந்த தி.மு.கவை விமர்சித்தவர்கள் இப்போது காங்கிரஸுடன் அக்கட்சி இல்லாத சூழ்நிலையிலும் அ.தி.மு.கவிற்காகவே பிரசாரம் செய்து வருகிறார்கள். அப்படிச் செய்பவர்களில் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த சீமானைச் சொல்லலாம். இலங்கைத் தமிழர்களுக்காக அவர்களுடன் சேர்ந்து போராடிய வைகோ பற்றிக்கூட அவர்கள் கவலைப்படவில்லை.

ஆனால், தமிழக அரசியல் மத்தியில் காங்கிரஸ் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள், மோடி வந்தால் எல்லாப் பிரச்சினையும் தீரும் என்ற பிரதான கோஷங்கள் என்று தமிழ்நாடு தேர்தல் களைகட்டி முடிவுக்கு வந்திருக்கிறது. வாக்காளர்கள் எல்லாமே என்ன முடிபு எடுத்து வைத்துள்ளார்கள் என்பதை எந்த சர்வேயாலும் முடிபு செய்ய முடியவில்லை என்பதுதான் உண்மை நிலவரம். இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் இது ஒரு வித்தியாசமான தேர்தல் என்ற நிலைமையில் தான் இந்த நாடாளுமன்றத் தேர்தல் இருக்கிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 40 நாடாளுமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. இவற்றுள் அதிக எம்.பிக்களை வாங்கும் கட்சிக்கு டெல்லி யோகம் அடிக்கிறது. ஆனால், இது எந்த கட்சி பக்கம் போகப்போகிறது என்பது தெளிவில்லாத காட்சியாகவே இருக்கிறது. இப்போதைக்கு பா.ஜ.க. அணி அதிக வாக்குகள் பெறும் இடங்களில் அ.தி.மு.கவிற்கு தலைவலியாகும். காங்கிரஸ் அதிக வாக்குகள் பெறும் இடங்களில் தி.மு.கவிற்கு தலைவலியாகும் என்பதுதான் தேர்தல் களத்தின் பிரதிபலிப்பாக இருக்கிறது. அ.தி.மு.க. கூட்டணி பலமானது என்று பேசப்பட்டாலும், அக்கட்சிக்கு எதிரான வாக்குகளும் இருக்கிறது. தி.மு.கவிற்கு கூட்டணிகள் இருக்கிறது என்றாலும் தி.மு.க. மட்டுமே அக்கூட்டணியில் பலம் பெற்ற கட்சியாக இருக்கிறது. சிறுபான்மையினர், தலித் உள்ளிட்ட வாக்கு வங்கியை பிரதானமாக நினைத்து களத்தில் நிற்கிறது தி.மு.க.. யார் வெற்றி பெற்றாலும் குறைந்த வாக்குகள் வித்தியாசம் என்ற ரீதியில்தான் தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் காட்சிகள் அமைந்திருக்கின்றன. ஆனால், இதுவே நிலையானது அல்ல. அடுத்த சில தினங்களில் மக்கள் மனதை மாற்றும் சக்தி தலைவர்களின் பிரசாரத்திற்கு கிடைத்திருக்கிறதா என்பதும் தெளிவாகும். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு சந்திக்கும் 16 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் களக் காட்சிகள் தமிழகத்தில் சற்று வித்தியாசமானதாக இருக்கின்றன.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் நினைத்தால் அரசை கவிழ்த்து புதிய அரசாங்கத்தை உருவாக்க முடியும்

## எமது இலக்கு அதுவல்ல என்றார் அத்தே ஞானசார தேரர்

**குற்றச்சாட்டுகளுக்குப் பயந்து செயற்படும் அமைப்பல்ல பொதுபல சேனா. நாம் நினைத்தால் அரசாங்கத்தை கவிழ்க்கவும் முடியும், புதிய அரசாங்கமொன்றினை உருவாக்கவும் முடியும் என பொதுபல சேனா பௌத்த அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

தீவிரவாதிகள் யார் என்பது அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிற்கு தெரியும். அமைச்சர் வாசுவை உடனடியாக கைது செய்து விசாரணைகள் நடத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பொதுபல சேனா பௌத்த அமைப்பினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் அமைப்புகளினதும், அமைச்சர்களினதும் குற்றச்சாட்டுகளுக்கு பயந்து செயற்படும் அமைப்பில் நாம் எமது செயற்பாடுகளும் கொள்கைகளும் உண்மையானதாகவும் மக்களை பாதுகாக்கும் வகையிலுமே அமைந்துள்ளது.

நாம் குற்றவாளிகள் என்பது உண்மையானால் இராயப்பு ஜோசப் ஆண்டகை, உலமாக்கல் யார் ? நாம் ஓர் இனத்தைப் பாதுகாக்க போராடுகின்றோம். ஆனால், இவர்கள் நாட்டையே காட்டிக் கொடுத்து தேசத்துரோக செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். எனவே, எம்மைத் தண்டிக்கும் முன்னர் முஸ்லிம், கிறிஸ்தவ தேசத்துரோகிகளை கைது செய்து தண்டிக்க வேண்டும்.

நாம் நினைத்தால் அரசாங்கத்தை கவிழ்த்து புதிய அரசாங்கத்தை உருவாக்க முடியும். ஆனால், எமது இலக்கு அதுவல்ல. நாம் பௌத்த தர்மத்தின்படி செயற்படுவதை தவிர்க்கின்றோம். ஆனால் எமக்கு ஓர் எல்லை உண்டு. அதை மீறும் வகையில் எம்மை சீண்டி விடக்கூடாது.

மேலும், விடுதலைப்புலி தீவிரவாதிகளும் முஸ்லிம் தீவிரவாதிகளும் இலங்கையில் எங்கு உள்ளனர். அவர்கள் யார் என்ற உண்மை அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிற்கு நன்றாகத் தெரிந்துள்ளது. தெரிந்ததன் காரணத்தினாலேயே ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எனவே, அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவை உடனடியாக கைது செய்து அவர் மீதான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். நாட்டின் இரகசியங்களை வேறு நாடுகளுக்கு சொல்வதும், நாட்டிற்கு எதிரான தீவிரவாதிகளை அரசிடம் சொல்லாது மறைப்பதும் தேசத்துரோகமான செயற்பாடாகும்.

அதனையே இன்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார செய்து வருகின்றார். அவர் மீது அரசாங்கம் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (2)

## பணிப்பெண்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்புக்கள் அதிகம்

**பிரதி பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய தெரிவிப்பு**

ஐரோப்பிய நாடுகளில் வீட்டு பணிபெணகளுக்கான வேலை வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வீட்டுப் பணிப்பெண் தொழிலில் அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்க எதிர்பார்த்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

25 தொடக்கம் 45 வயதிற்கும் இடைப்பட்ட பெண்களுக்கே இந்த வேலை வாய்ப்பு காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலதிக தகவல அறிய, 077 3148927 , 077 3 983 536 மற்றும் 0775 489 506 ஆகிய இலக்கங்களுக்கு அழைப்பு ஏற்படுத்துமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மூன்று வாரகால பயிற்சியின் பின மொழி தேர்ச்சிப் பயிற்சியில் சித்தி பெறும் பெண்களை எவ்வித கட்டணமும் இன்றி ஐரோப்பிய நாடுகளுக்கு பணிப் பெண்களாக அனுப்பி வைக்க எதிர்பார்த்துள்ளதாக மங்கல ரந்தெனிய தெரிவித்தார். (2)



தமிழ் நாடு சென்னை இராஜா அண்ணாமலை மன்றத் தமிழ் இசைச் சங்கத்தில் அண்மையில் அரனருள் 11 ஆவது ஆண்டு திருமுறை இசை விழாவில் போது தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவாற்றிய கொக்குவில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவைப் பாராட்டி அரனருள் ஸ்தாபகர் சாமி தண்டபாணி ஓதுவார் பொன்னாடை போர்த்தி இசைக்கதாரத்தினாம் எனும் விருது வழங்கி கௌரவித்தார். அரனருள் தலைவர் சபா. சண்முகசுந்தரம் அருகில் நிற்பதைப் படத்தில் காணலாம்

## முறைப்பாடுகளை அறிவிக்க பணிப்பெண்களுக்கு தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் வீட்டு பணியாளர்களாகப் பணியாற்றுபவர்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு விசேட தொலைபேசி இலக்க சேவையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சவுதி அரேபியாவின் தொழில் அமைச்சு இந்த விசேட தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தவிருப்பதாக சவுதி அரேபிய வாராந்த பத்திரி கையொன்றை மேற்கோள் காட்டி சிங்குவா சர்வதேச செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தொலைபேசி சேவையின் மூலம் முறைப்பாடுகளைச் செய்ய விரும்புபவர்கள் எட்டு மொழிகளில் முறைப்பாடுகளைப் பதிவுசெய்ய முடியும் என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சவுதி அரேபிய தொழில் அமைச்சு குறித்த தொலைபேசி இலக்கத்தின் மூலம் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்துவதுடன், அந்நாட்டில் பணிபுரியும் வீட்டுப்பணியாளர்களின் உரிமைகள் குறித்தும் தகவல்களை வழங்கவுள்ளன.

இந்த விசேட தொலைபேசி இலக்கத்தின் மூலம் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளைப் பதிவுசெய்து, தேவையாயின் நீதித்துறையுடன் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு முறைப்பாடுகளை அனுப்புவதற்கு சவுதி அரேபிய தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கை, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், இந்தியா உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த 1.2 மில்லியன் வீட்டுப் பணியாளர்கள் சவுதி அரேபியாவில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## இன்று ஒரு தகவல்

### குழந்தை மனம்

ஒரு குழந்தை தொட்டிலில் படுத்திருந்தது. அழுது கொண்டிருந்தது. குழந்தையின் அம்மா சமயலறையில் ஏதோ வேலையாக இருந்தார். அப்பா சும்மா தான் இருந்தார்.

சரி நாம் ஏதாவது முயற்சி செய்து அழுகையை நிறுத்த முடியுமா என்று நினைத்து அப்பா எழுந்து குழந்தைக்கு அருகில் போனார். ஒரு தாலாட்டுப் பாடிப் பார்க்கலாம் என்று பாட ஆரம்பித்தார். அது வரைக்கும் மெதுவாக அழுது கொண்டிருந்த குழந்தை பலமாக கத்தி அழ ஆரம்பித்து விட்டது.

உடனே அப்பா ஓடிவந்து தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டு மறுபடியும் பததிரிகை படிக்க ஆரம்பித்து விட்டார்.

தாய் வந்து ஏதோ சொல்லி அந்தக் குழந்தையை சமாதானம் செய்து அமைதிப்படுத்தினார்.

குழந்தையை அழ வைக்கிறது என்றால் அது அப்பாவால் தான் முடியும். அழும் குழந்தையை அமைதிப்படுத்துவது என்றால் அது அம்மாவால் தான் முடியும்.

இப்படி பல அம்மாக்கள் சொல்வதுண்டு. வேறு வழியில்லாமல் அப்பாக்களும் இதை ஒத்துக்கொள்வது உண்டு.

இது வரைக்கும் சரி... இனிமேல் அவர்கள் அப்படி ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

ஏனென்றால் அவர்களாலும் குழந்தையின் அழுகையை நிறுத்த முடியும். இதற்கு ஒரு வழி இருக்கிறது. இப்பவே சொல்லிக் கொடுத்து விடுகிறேன்.

இது என்னவென்றால் மனோதத்துவ நிபுணர்கள் சில பேர் ஒரு சோதனை செய்து பார்த்து விட்டு இதைச் சொல்லியிருக்கிறார்கள். என்ன தெரியுமா? வேறு ஒன்றுமில்லை.

உங்கள் வீட்டுக் குழந்தை அழ ஆரம்பிக்கிறதா?

உடனே ஒரு டேப்ரிக் கார்டரை எடுத்துக் கொண்டு குழந்தைக்கு அருகில் செல்லுங்கள். அது அழுவதை அப்படியே நன்றாகப் பதிவுசெய்து வைத்துக் கொள்ளுங்கள்.

அந்தக் குழந்தை மறுபடியும் எப்போதாவது அழ ஆரம்பித்தால் இந்த டேப்பை உடனே அதற்குப் போட்டுக் காட்டுங்கள்.

உடனே குழந்தை அழுகையை நிறுத்திவிடும்.

அதே போல ஒரு மருந்துப் போத்தலை குழந்தை தொடக்கூடாது என்று நினைத்தீர்கள் என்றால் அந்தப் போத்தல் மேல் ஒரு அழும் குழந்தையின் படத்தை ஒட்டி வையுங்கள்.

அதைப் பார்த்துவிட்டால் குழந்தைகள் அதைத் தொடுவதற்கு தயங்க ஆரம்பித்து விடுவார்களாம்.

அவுஸ்திரேலியாவில் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சோதனை செய்து பார்த்துவிட்டு இதைச் சொல்லுகிறார்கள்.

ஆகவே ஒரு குழந்தை அழும் சத்தத்தைக் கேட்டால் இன்னொரு குழந்தை அழுகையை நிறுத்திக் கொள்கிறது.

ஒரு குழந்தை அழுவதைப்போல் உள்ள படத்தை இன்னொரு குழந்தை தொடுவதற்கு யோசிக்கிறது.

இதுதான் இன்றைய தகவல்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வோஷிங்டனில் உள்ள வெளியுறவுத்துறை அமைச்சகத்தில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க அமைப்பின் 2ஆவது காலாண்டு வளர்ச்சி அறிக்கை குறித்த கூட்டத்தில் வெளியுறவு செயலர் ஜோன் கெர்ரி பேசுவதை படத்தில் காணலாம்.

# தென் கொரிய கப்பலை மீட்க அமெரிக்க கடற்படை உதவி

கடலில் மூழ்கிய தென் கொரிய கப்பலை மீட்க, அமெரிக்க கடற்படை கப்பல் அனுப்பியுள்ளது. தென் கொரியா அருகே, 325 மாணவர்கள் உட்பட, 475 பேருடன் சுற்றுலா தீவு ஒன்றுக்கு பயணித்த கப்பல், இம்மாதம் 15 ஆம் திகதி கடலில் மூழ்கியது. இதில், 179 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர் 100 பேர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

காணாமல் போனவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பயணிகளை காப்பாற்றாமல் தப்பிய கப்பலின் மாலுமி உள்ளிட்ட நான்கு பேர். கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, மூழ்கிய கப்பலை மீட்க, அமெரிக்க கடற்படையின், நவீன கப்பல் ஒன்றை அனுப்பியுள்ளது.

தாய்லாந்து அருகே முகாமிட்டிருந்த அந்த கப்பல், தென் கொரியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தேவைப்பட்டால், கூடுதல் கப்பல்களை அனுப்பவும் அமெரிக்க இராணுவ தலைமையகம் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

# உக்ரைனுக்கு அமெரிக்கா 50 மில்லியன் டொலர் நிதியுதவி




(கீவ்)

உக்ரைனில் ஏற்பட்ட கலவரத்தை தொடர்ந்து அந்நாட்டின் அரசியல் மற்றும்பொருளாதார நிலை சிறப்படையவும் நிதியுதவியாக அமெரிக்க அரசு 50 மில்லியன் டொலர் வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது. மேலும் அப்பகுதியில் மீண்டும் இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கு போது மான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகையலிருந்து துணைஜனாதிபதி ஜோ பைடன் கூறுகையல் உக்ரைனாட்டில்போதுமான வசதிகள் ஏற்படுததி தருவதற்கு அமெரிக்க அரசு உறுதுணையாக இருக்கும். மேலும் உக்ரைனில்வளமான எதிர்காலத்தை உருவாகக போதுமான வசதிகளை செய்யவும் எங்களது அரசு தயாராக உள்ளது" என்று தெரிவித்தார்.

# பா.ஜ.கவின் மாற்றாந்தாய் போக்கே ஈழத்தமிழர் படுகொலைக்கு காரணம்

## சரத்குமார் பேட்டி



இன்று நடைபெற இருக்கிற தேர்தலை முன்னிட்டு சமத்துவ மக்கள் கட்சி நிறுவனத்தலைவர் சரத்குமார் எம்.எல்.ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது, பாரதம் உயரும் தமிழகத்தின் உரிமையை தமிழக மக்களின் உரிமையை நிலைநாட்டுிறசக்திமுதல் அமைச்சர் புரட்சித் தலைவியிடமே இருக்கிறது என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,நம் இந்திய திருநாட்டின்16ஆவது நாடாளு மன்ற தேர்தலில் இன்று நாம் வாக்களிக்கவுள்ளோம். ஊழல், மதசார்பு இரண்டுமே நம் நாட்டின் வளர்ச்சியை தடுத்து நிறுத்திவிடும்.

உலகத்தில் மிகப்பெரிய ஊழல்களைச் செய்துள்ள காங்கிரஸ் கட்சியும், மத சார்புடைய பா.ஜ.கவும் மத்தியில் ஆட்சி புரிந்துள்ளார்கள். மாறி, மாறி அதிகாரத்திற்கு வந்த போது செய்யாததை, இப்போது செய்யப்போகிறோம் என்று தேர்தல் அறிக்கை வெளியிடுகிறார்கள்.

மத்தியில் ஒரு மாற்றத்தை உருவாக்கியே தீர வேண்டும். அந்த மாற்றம் தமிழ் நாட்டிற்கும், தமிழக மக்களுக்கும், நன்மை பயக்கக் கூடியதாக அமைந்திட வேண்டும். தமிழகத்திற்கு போதிய நிதி ஒதுக்கப்படாதது, இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படுகிற போது கூட தேவைக்கு நிதி அளிக்காதது, காவிரி பிரச்சினையில் காங்கிரஸ், பா.ஜ.க வின் மாற்றான்தாய் போக்கு, ஈழத்தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதற்கு காரணமாக இருந்தது.

நம மீனவர்கள் பிரச்சினையைக் கணடு கொள்ளாதது, முல்லைப பெரியாறு பிரச்சினையில் உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பை ஏற்காதது, மத்திய தொகுப்பில் இருந்து தமிழகத்திற்கு மின்சாரம் கிடைக்கும் வசதிகு மின் வழித்தடங்கள் அமைக்காமல் குறுக்கே நிற்பது என தமிழகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

17 ஆண்டுகள், அதில் 14 ஆண்டுகள் தொடர்ந்து மத்திய ஆட்சியில் பதவி சுகம் கண்ட தி.மு.க ஊழலில் சாதனை புரிந்துள்ளார்களே ஒழிய தமிழக மக்களுக்கும், தமிழ நாட்டிற்கும் எந்தத் திட்டத்தையும் ஆக்க பூர்வமாக செய்திடவில்லை. மக்கள் தெளிவாக இருக்கிறார்கள.

அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டு தொலைநோக்குத் திட்டங்களுடன் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. அதே போன்று முதலஅமைச்சர் சுட்டிக்காட்டுகிற ஆட்சி மத்தியில் அமைகிறபோது நம் தமிழகம் இலாபம் பெறும். பாரதம் உயரும். தமிழகத்தின் உரிமையை, தமிழக மக்களின் உரிமையை நிலைநாட்டுிற சக்தி முதல் அமைச்சர புரட்சித்தலை வியிடம் இருக்கிறது.

எனவே, ஊழலற்ற, மதசார்பற்ற ஆட்சி உருவாக்கிட, சிறுபான்மையினர் நலன் உண்மையாகவே பேணிக்காக்கப்பட தமிழக மக்கள் சிந்தித்து "இரட்டை இலைக்கே" வாக்களிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு சரத்குமார் கூறியுள்ளார்.

# உக்ரைனில் ரஷ்ய இராணுவ முகாம் புகைப்பட ஆதாரம் வெளியீடு

உக்ரைன் கிழக்குப் பகுதியில் முகாமிட்டுள்ள ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியாளர்கள், உண்மையில் ரஷ்ய இராணுவத்தினர் அல்லது அதன் உளவுத்துறை அதிகாரிகள் என்பதற்கான புகைப்பட ஆதாரத்தை அமெரிக்க வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ளது.

இதன் மூலம் அந்தப் பிராந்தியத்தில் தங்கள் இராணுவம் ஊடுருவவில்லை என்று மறுத்து வரும் ரஷ்யாவின் கூற்றினை பொய் என்பதை நிரூபிக்கும் புதிய முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஜேன் சாகி கூறுகையில், உக்ரைன் அதிகாரிகளால் எடுக்கப்பட்ட இத்தகைய புகைப்படங்களை சர்வதேச பத்திரிகை அல்லது டுவிட்டர் இணையதளத்தில் காணலாம். இவை, ரஷ்ய இராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்ள தொடர்பை உறுதி செய்வதற்கான ஆதாரங்களாகும் என்றார்.

ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பின் மூலம் அமெரிக்காவிடம் இந்தப் புகைப்படங்களை உக்ரைன் வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# மாயமான மலேசிய விமானம் இந்திய பெருங்கடலில் விழவில்லை

மாயமான மலேசிய விமானம் தெற்கு இந்திய பெருங்கடலில் விழவில்லை என்றும் அது எங்கோ தரையிறங்கியிருக்க வேண்டும் எனறும் சர்வதேச விசாரணைக் குழு வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பீஜிங் புறப்பட்ட மலேசிய விமானம் எம்.எச். 370 தெற்கு இந்திய பெருங்கடலில் விழுந்து மூழ்கிவி ட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் விமானம் கடலில் விழவில்லை என்று சர்வதேச விசாரணை குழு வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் கூறப்படுவதாவது,

விமானத்தை இத்தனை நாட்கள் தேடியும் ஒரு பாகம் கூட கிடைக்காததால் அது வேறு எங்காவது தரையிறங்கியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. நல்ல தகவல் எதுவும் கிடைக்காவிட்டால் அடுத்த சில நாட்களில் வேறு எங்காவது விமானத்தை தேடுவது குறித்து முடிவு செய்ய வேண்டும். அதே சமயம் இந்திய பெருங்கடலில் விமானத்தை தேடும் பணி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும்.

விமானம் வேறு எங்காவது தரையிறங்கியிருக்கலாம் என்பது சாத்தியமில்லாத விடயம் இல்லை. ஏனென்றால் இதுவரை விமான பாகங்கள் எதுவுமே கிடைக்கவில்லை.

விமானத்தை 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் தேடிக் கொண்டிருக்கையில் அதை ஒரு குறிப்பிட்ட நாடு மறைத்து வைத்திருப்பதாகக் கூறுவது அபத்தம்.

விமானம் வேறு எங்காவது விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் விமானத்தை தேடும் பணியை முதலில் இருந்து ஆரம்பிக்கும் திட்டமுமுள்ளது.

# தமிழகத்தில் தேர்தல்; தீவிர பாதுகாப்பு

(சென்னை)

தமிழகம் மற்றும் புதுவையில் 40 பாராளுமன்ற தொகுதிகளிலும் இன்று ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது.

தேர்தலை அமைதியாக நடத்தி முடிக்க தேர்தல் கமிஷன் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக எப்போதும் இல்லாத அளவுக்கு இந்த தேர்தலில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பாதுகாப்பு பணியில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பொலிசார் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில், 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணை இராணுவ படையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தமிழகம் முழுவதும் [illegible] து மாவட்டங்களிலும் பொலிசார் உசார்படுத்தப்படவுள்ளனர்.

# அமெரிக்காவில் நிலச்சரிவு உயிரிழப்பு 41 ஆக உயர்வு



அமெரிக்காவில் வோஷிங்டன் மாகாணத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கடும் மழை பெய்தது. அதை தொடர்ந்து ஓசோ நகரில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது.

மரங்கள் மற்றும் பாறைகள் சரிந்து விழுநதன. அதில் ஏராளமான வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து மண்ணுக்குள் புதைந்தன. அதை தொடர்ந்து பொலிஸாரும், சமூக சேவகர்களும் இணைந்தும் மீடபு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் பலர் பலியாகினர். அவர்களின் சடலங்கள் மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. சமீப த்தில் மேலும் சில சடலங்கள் இடிபாடுகளில் இருந்து மீட்கப் பட்டன, இதனால் பலியானோர் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசு வழங்கிய உழவூர்திகள் முறையாக பராமரிக்கப்படவில்லை

## வடமாகாண விவசாய அமைச்சர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்திய அரசால் வழங்கப்பட்ட உழவூர்திகள் முறையாகப் பராமரிக்கப்படாமல் பல இடங்களில் வெயிலிலும் மழையிலும் கிடந்து பழுதடைந்து கொண்டிருப்பதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கமநலசேவைகள் திணைக்களத்தைக் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணசபையின் நிர்வாகத்தை முடக்குகின்ற வகையிலேயே மத்திய அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. கமநலசேவைகள் திணைக்களம் பொருளாதார அமைச்சின் கீழ் தற்போது உள்வாங்கப்பட்டிருக்கும் நிலையில், அந்தத் திணைக்களம் மாகாண விவசாயத் திணைக்களத்துடன் ஒத்திசைந்து செயற்பட மறுக்கிறது. கமநலசேவைகள் திணைக்களத்தின் கீழ் வருகின்ற விவசாய சம்மேளனங்கள் பல இடங்களில் பல வருடங்களாகத் தேர்தல் நடத்தப்படாமல் செயற்றிறன் குன்றியவையாக உள்ளன.

இந்திய அரசாங்கம் வடமாகாணத்துக்கென வழங்கிய 500 உழவூர்திகளும் கமநலசேவைகள் திணைக்களத்தினூடாகவே விநியோகிக்கப்பட்டன. இந்த உழவூர்திகளின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் இவற்றுக்கு உழவுப் பெட்டிகளை வழங்குவது பொருத்தமானது என்று கருதினோம்.

அதற்காக உழவூர்திகள் தற்போது எங்கே? எவரது பராமரிப்பில் உள்ளது? அவற்றின் பயன்பாடு எந்த அளவுக்கு உள்ளது? போன்ற விபரங்களைத் தந்து உதவுமாறு எனது அமைச்சின் செயலாளர் மூலம் கமநலசேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பியிருந்தோம்.

பல மாதங்கள் கடந்த நிலையில் உரிய பதில் கிடைக்கவில்லை. மத்திய பொருளாதார அமைச்சிடம் இருந்து மாகாண விவசாய அமைச்சுக்கு இந்தத் தகவல்களை வழங்க வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# ஜனாதிபதி பௌத்தராக இருந்தால் கசினோ சட்டத்தை நிறுத்த வேண்டும்

## தேசிய சங்கப் பேரவை கோரிக்கை

கொழும்பை சிக்காகோவாகவோ அல்லது பாங்கொக்காகவோ மாற்றிவிட வேண்டாம் என தேசிய சங்கப் பேரவை அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

ஜனாதிபதி மெய்யான பௌத்தராக இருந்தால் கசினோ சட்டத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தேசிய சங்கப் பேரவையின் நிதிச் செயலாளர் வட்டரக்க விஜித தேரர் தெரிவித்துள்ளார்.

கசினோ சூதாட்ட மையங்கள் அமைக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். நாடு எவரினதும் பொதுச் சொத்து அல்ல எனவும் கொழும்பு சிக்காக்கோ அல்லது பாங்கொக் போன்ற கசினோ புரியாக மாறுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# வில்பத்தில் குடியேற்றப்பட்டுள்ள முஸ்லிம்கள் வெளியேற்றப்படுவார்கள்

## அமைச்சர் விஜித் சொய்ஸா தெரிவிப்பு

(கொழும்பு)

வில்பத்து தேசிய பூங்காவில் குடியேற்றப்பட்டுள்ள முஸ்லிம்கள் அனைவரும் விரைவில் அங்கிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதியில் முஸ்லிம்களை குடியேற்றுவதற்கான வீடுகள் அமைக்கப்படவில்லை. மாறாக அங்கு 44 தற்காலிக கூடாரங்களே அமைக்கப்பட்டுள்ளன.

அவை அனைத்தும் விரைவில் களையப்பட்டு அங்குள்ள முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு நாடு ஒன்றின் நிதி உதவியுடன், அமைச்சர் றிசாத் பதியுதீன் இந்த குடியேற்றத்தை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மஹியங்கனை பிரதேச சபைக்கு முன்னால் நேற்றைய தினம் வட்டரக்க விஜித தேரருக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

வில்பத்து தேசிய பூங்காவில் இடம்பெற்றுள்ள முஸ்லிம்களின் சட்ட விரோத குடியேற்றத்துக்கு அவர் ஒத்துழைப்பு வழங்கியதாக தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (2)

# க.பொ.த (சா.த) பெறுபேறுகள்

(மட்டுவில்)

2013 ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த க.பொ.த.(சா/த) பரீட்சையில் யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் பெற்றுக் கொண்ட பெறுபேற்றை வித்தியாலயத்தின் அதிபர் ரி.கணேசபாலேந்திரன் அறிவித்துள்ளார்.

முன்னணி பெறுபேறுகள் வருமாறு,

ப.சுதர்ஷன்–7ஏ2சி, க.பிரியங்கா–7ஏ2சி, கு.றதீபா–7ஏபிஎஸ், ம–திலக்ஷன்–3ஏ3பி2சிஎஸ், ம.கம்லக்ஸ–3ஏ2பி3சிஎஸ். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### தியாகராஜா மோகன்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்து Denhaag வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா மோகன் கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு Mounta Innemee, Laan van Eik en Duin 38, 2564 GT Den Haag, Netherlandsஎன்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி அருணாசலம் கனகம்மா

கரம்பகம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் பாலாவி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் கனகம்மா ஓய்வு பெற்ற ஆசிரியர்கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலாவி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சிவரத்தினம் சண்முகவடிவேல்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவரத்தினம் சண்முகவடிவேல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலை மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றது.



### கதிர்காமு உமாமகேஸ்வரன்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு உமாமகேஸ்வரன் கடந்த 19 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சிவகுரு அருள்பிரகாசம்

யாழ்ப்பாணம் ஊரெழுவை பிறப்பிடமாகவும் மட்டக் களப்பு கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு அருள் பிரகாசம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு நாவலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### அல்பிரட் கிறிஸ்ரின் ஜோசப்

சென்.ஜேம்ஸ் வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி, டுயிஸ்பேர்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் கிறிஸ்ரின் ஜோசப் கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று பிற்பகல் ஜேர்மனியில் நடைபெறும்.

# ஆசிரியர்கள் இடமாற்றங்களில் அரசியல் தலையீடு அற்ற பொறிமுறை அவசியம்

## சந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**பின்தங்கிய பிரதேசங்களை நோக்கிய ஆசிரியர்கள் இடமாற்றங்களின் போது அரசியல் தலையீடுகள் அற்ற சிறந்த பொறிமுறை பின்பற்ற வேண்டும் என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.**



கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தை பொறுத்த வரை சில குறிப்பிட்ட பாடங்களை தவிர ஆசிரியர் ஆளணி வளம் அதிகமாகவே இருக்கிறது.

இருப்பினும் வன்னியில் தொடர்ந்தும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது.

குறிப்பாக பாடரீதியான ஆசிரியர் வளப்பற்றாக்குறை தீர்க்கப்படாத ஒன்றாகவே காணப்படுகிறது.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் அடுத்த வாரம் தொடக்கம் 422 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட போகிறது.

இந்த பற்றாக்குறையினை கிளிநொச்சி வலயம் எவ்வாறு கையாளப்போகிறது என்பது தொடர்பில் இதுவரை ஒரு திட்டமில்லை.

அரசின் தேசிய கொள்கைக்கு அமைவாக 19 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்.

ஆனால், வடக்கில் 17 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையில் உள்ளது.

அத்தோடு வடக்கு மாகாணத்திலும் யாழ்ப்பாணத்தில் 28 மாணவர்களை கொண்ட வகுப்பு ஒன்றிற்கு ஒரு ஆசிரியரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 45 மாணவர்களை கொண்ட வகுப்பு ஒன்றிற்கு ஒரு ஆசிரியரும் என்ற விகிதத்தில் ஆசிரியர் வளம் காணப்படுகிறது.

இந்த பாகுபாடான வேறுபாடுகளை தீர்ப்பதற்குரிய எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாக தெரியவில்லை.

எனவே, விரை வில் ஆசிரியர் வளம தொடர்பில் காணப்படுகின்ற மேற்படி நிலை மைகளை நியாயமான முறையில் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் விரை வல் மேற்கொள்ளப்படல் வேண்டும ஏனக் குறிப்பிட்டார்.

அத்தோடு வட மாகாணத்தின் கல்வி கொள்கை எல்லா பிரதேசங்களுக்கும் ஒரேவிதமாக இருக்க வேண்டும் வசதிவாய்ப்புகள் கூடிய பிரதேசங்களுக்கு ஒருவிதமாகவும் பின்தங்கிய பிரதேசங் களுக்கு ஒரு விதமாகவும் இருப்பது மாவட்ட கல்வி வளர்ச்சியினை கேள்விக்குள்ளாக்கிவிடும் என்றார் (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கல்வியமைச்சின் கல்வி மாநாடு நேற்றும் இன்றும்

வடமாகாண கல்வி முறைமை மீளாய்வு கல்வி ஆலோசனை செயலமர்வு கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் நேற்றைய தினம் ஆரம்பமானது.

முன்னதாக இந் நிகழ்வோடு ஒட்டியதான சதுரங்கப் போட்டியினை யாழ்.இந்துக் கல்லூரியில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன ஆரம்பித்து வைத்தார்.

**யாழ்.மாணவியிடம் தோல்வியுற்ற பந்துல**

இச் சதுரங்க போட்டியின் போது யாழ். மாணவியொருவரோடு கல்வியமைச்சர் பந்துல குணவர்தன சதுரங்க ஆட்டம் ஆடினார். இதன்போது குறித்த மாணவி கல்வியமைச்சரின் காய்களை வெட்டி வீழ்த்தினார்.

இச் சதுரங்கப் போட்டியில் 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வின் பின்னர் முற்பகல் 9 மணியளவில் கோண்டாவில் ராஜேஸ்வரி மண்டபத்தில் வடமாகாண கல்வி முறைமை மீளாய்வு கல்வி ஆலோசனை செயலமர்வு வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் ஆரம்பமானது.

**முதலமைச்சர் உரை**

எமது தெருக்களில் இருக்கும் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளைப் பார்த்தீர்களானால் அவை எம்மை நில், கவனி, செல் என்று எச்சரிப்பதைக் காண்பீர்கள்.

வாழ்க்கை ஒரு ஓட்டம்தான். என்றாலும் அந்த ஓட்டத்தின்போது நாம் யாவரும் நின்று கவனித்துச் செல்லுதல் எமக்கும் நல்லது மற்றவர்களுக்கும் நல்லது. அதைத்தான் இந்தப் பணிக்கூடம் செய்ய முன்வந்துள்ளது.

இதுவரை ஓடிக்கொண்டிருக்கும் எங்கள் கல்வி சம்பந்தமான ஒழுங்குமுறையை அல்லது அதன் ஒழுங்கமைப்பை நின்று அவதானித்து புதிய உத்வேகத்துடன் முன் னேறிச் செல்ல முன்வந்துள்ளது எங்கள் மாகாணக் கல்வியமைச்சு. இதனால் பல நன்மைகளை நாங்கள் பெறலாம். இதுவரை காலமும் நாங்கள் பின்பற்றி வந்த வழிமுறைகள், செயற்பாடுகள், கொள்கைகள், இலக்குகள் ஆகியன எந்தளவுக்கு நன்மை பயப்பன. எங்கெல்லாம் குறைபாடுகள் இருக்கின்றன, ஏன் அந்த குறைபாடுகளை நாங்கள் சந்திக்க வேண்டி வந்துள்ளது என்பன போன்றவற்றை அலசி ஆராய ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் எமது கடந்த கால அனுபவத்தை முன்வைத்து எவ்வாறு முன்னோக்கிப் பயணிக்கவேண்டும் என்று ஆராய்ந்தறிவது மற்றொரு சந்தர்ப்பமாக எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதிலே மத்திய, மாகாண அமைச்சர்களும் அலுவலர்களும் பங்குபற்றுவது சாலச் சிறந்ததே.

நாட்டுக்கொரு முழுமையான இணைந்த கல்வி அமைப்பு இருப்பது அவசியமே. அதை நாங்கள் மறுக்கமாட்டோம். ஆனால் எமக்கென வடமாகாண தமிழ்பேசும் மக்களுக்கென தனித்துவம் ஒன்றிருப்பதை மத்திய அரசாங்கம் அடையாளம் காணவேண்டிய ஒரு கட்டாயம் எழுந்துள்ளதையும் மத்திய அரசாங்க அமைச்சர்களும் அலுவலர்களும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது எமது எண்ணங்களையும் எமது மனோநிலைகளையும் எமது பாரம்பரியங்களையும் எமது நோக்கையும் புரியாமல், அறியாமல் கல்வி சம்பந்தமான ஆவணங்களைத் தயாரிப்பது எமக்கு ஏமாற்றத்தையே அளிக்கும்.

மேலும் வட கிழக்கு மக்களுக்கு தென் மாகாணங்களில் வாழும் பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் பலவிதமாதன பாரம்பரிய ஒற்றுமைப்பாடுகள் இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. உதாரணம் எமது வருடப்பிறப்பு. இருசாராருக்கும் ஒரே காலத்தில்தான் வருகின்றது.

அடுத்து பார்த்தோமானால் ஆதிகாலம் தொடக்கம் கல்வியில் குரு சிஷ்ய பரம்பரை எம் எல்லோருக்கும் பொதுவானது. குருவிடம் இருந்து சிஷ்யன் அறிவைப் பெற்று அதை அவன் தன் சிஷ்யனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தான். ஒரு அறிஞனிடம் யார் உன் குரு? என்று கேட்டுத்தெரிந்து கொண்டாலே அவனின் பாரம்பரியம், அறிவின் ஆழம், ஆராய்ச்சித் திறன் போன்றவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் இன்று அந்த குருவின் பணியைத் தனியார் கல்வி நிலையங்கள் ஆற்றிவருவது மன வருத்தத்தைத் தருகின்றது. பரீட்சைக்கு மாணவ, மாணவியரைத் தயார்படுத்த மட்டுமே இந் நிலையங்கள் ஏற்றவையாக இருக்கின்றன. எமது ஆசிரியர்களும் அதேபோல் தான் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதற்கு அப்பால் எதையும் தெரியாதவர்கள்.

எம் மாணவ சமுதாயம் உண்மையைப் பேசப் பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு அன்று பெற்றோர்கள் எதிர்பார்த்தால்தான் அன்றைய மாணவ சமுதாயம் பெரியவர்களாகத் தமது வயது எய்திய காலத்தில் வளமுடன் வாழத் தலைப்பட்டார்கள்.

எம்மை வாழ்க்கைக்குப் பக்குவப் படுத்திக் கொள்வது கூடிய முக்கியத்துவம் உடையது என்பதே எனது வாதம். இது பற்றிக் கல்வியாளர்கள் சிந்திக்க வேண்டும்.

அரசாங்கம் இனாமாகத் தரவேண்டும்; யுனெஸ்கோ தரவேண்டும்; யுனிசெவ் தரவேண்டும்; British Council தரவேண்டும்; யுஎஸ் எயிட் தரவேண்டும்; அவுஸ் எயிட் தரவேண்டும் என்று அண்டிப் பிழைக்கவே எத்தனிக்கின்றோம்.

ஆனால் எமக்கு உதவி தரும் நிறுவனங்களும் நாடுகளும் பணத்தை மரங்களில் இருந்து பறித்துத் தருவதில்லை. தமது கொடை தருநரிடமிருந்தோ தமது மக்களிடமிருந்தோ வரியாகவோ வேறு வழிகளிலோ பணத்தை அறவிட்டே நிதி உதவி எமக்கு வழங்குகின்றார்கள்.

பலர் தமது படிப்புக்காகப் பகுதி நேர வேலை பார்க்கின்றார்கள். ஆனால் நாங்கள் யாசித்து உதவி பெற்று இனாமாகப் படிக்கின்றோம். எதனையும் மற்றவரிடம் இருந்து எதிர்பார்த்தே வளர்கின்றோம்.

தன்கையே தனக்குதவி என்பதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விட்டது இன்று. தமது கல்விக்காகத் தாங்கள் தங்களை வருத்தி வேலை செய்ய வேண்டும் என்ற நிலை வந்து விட்டால் எமது மாணவ சமுதாயத்தினிடையே தன்னம்பிக்கை தானாகவே வளர்ந்து விடும்.

எமது வடகிழக்கு மக்களும் அரசாங்க உத்தியோகம் கிடைத்தால் போதும் என்ற நிலையிலே எழுதுவினைஞர்களாக வெளிவந்து நிர்வாக சேவையில் மேல் நோக்கிச் சென்று ஓய்வூதியத்துடன் ஒதுங்கிக் கொண்டார்கள். ஆனால் இன்றைய தேவை அதுவன்று.

நாம் பொருளாதார விருத்தியடைய தொழில்நுட்பம், வணிகம் போன்றவற்றில் சிறப்படைய போதுமான தொழிற்திறனைப் பெற வேண்டியுள்ளது. பல்தொழில்களில் பயிற்சி பெற வேண்டியுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை எமது மாகாணக் கல்வித் துறையினர் எடுத்து வருகின்றார்களா என்பதை அறிய ஆவலாய் உள்ளேன்.

அத்துடன் மாகாணங்கள் தொழிற்திறன்கள் பெறக்கூடிய பல்கலைக்கழகங்களை நிறுவினால் என்ன என்று கேள்வியையும் எழுப்புகின்றேன். எல்லோரும் வைத்திய கலாநிதிகளாகவோ, எந்திரிகளாகவோ, கணக்காளர்களாகவோ, சட்டத்தரணிகளாகவோ வர வேண்டும் என்று எண்ணுவது மடமை. வருங்காலம் பொருளாதார விருத்தியை மையமாக வைத்து முன் செல்லப் போகும் காலம். அதற்கு ஏற்றவாறு கல்வி சீரமைய வேண்டும்.

இன்று எமது மக்கள் கொடூரமான ஒரு போரின் பின்னணியில் இருந்த விடுபட்டு வந்துள்ளார்கள். போர்க்கால வாழ்க்கையை இன்றும் நினைவுபடுத்த இராணுவம் எங்கும் வியாபித்து நிற்கின்றது. அப்படியிருந்தும் நாம் முன்னேற வேண்டுமென்றால் நிச்சயமாக எமக்குத் தொழிற்கல்வி அத்தியாவசியமாகின்றது.

“எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு” என்றான் வள்ளுவன். அந்த உயர் படித்தரத்தை முன்வைத்தே எமது கருத்தரங்குகளும், கருத்துப் பரிமாற்றங்களும், ஆராய்ச்சிகளும் நடைபெற வேண்டும். எனவே யார் என்ன கூறியிருப்பினும் அதன் உண்மையை ஆராய்ச்சி மூலம் ஆராய்ந்து அறிந்து கொள்வோமாக! என்றார்.

**கல்வியமையமைச்சர் பந்துல உரை**

ஆங்கிலேயர்களினால் எமது நாடு கைப்பற்றப்பட்டதன் பின்னர் ஆங்கிலேயர் கல்வி முறையே எமக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் எமது நாட்டு கல்வி முறையில் பாரியளவிலான மாற்றங்களை கொண்டுவரவுள்ளோம்.

மாணவர்கள் கலைத்துறையில் மட்டும் ஆர்வம் காட்டாமல் விஞ்ஞான துறையிலும் கணித மற்றும் தொழில்நுட்ப துறைகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும்.

**தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்**

வடக்கு, கிழக்கிலுள்ள தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டு பின்னர் ஆசிரிய துறையில் உள்வாங்கப்படவுள்ளனர் என்றார்.

**குழுநிலை விவாதம்**

இதன்பின்னர் குறித்த செயலமர்வில் கலந்து கொண்ட பேராசிரியர்கள் மற்றும் கல்வியியலாளர்களால் குழுநிலை விவாதம் இடம் பெற்றது.

**முடிவு**


இதன்பின்னர் பிற்பகல் 5 மணியளவில் நிகழ்வுகள் யாவும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நிறைவுற்றது.

**இன்றும் தொடரும்**

குறித்த செயலமர்வு இரண்டாம் நாளாக இன்றும் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (2-4)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல். -பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ரோம சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிபோல தீவகத்தின் கல்வி வீழ்ச்சி

ரோம சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிபற்றி அறிந்தவர்கள் நிச்சயமாக அது தொடர்பில் கவலை கொள்வர். அந்தளவிற்கு ரோம சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிப் பின்னணி மனத்தை நெருட வல்லது.

இதே நிலைமை இப்போது எங்கள் தீவகத்தின் கல்விக்கு ஏற்பட்டுள்ளது எனலாம். ஒரு காலத்தில் அறிஞர்களையும் ஆசான்களையும் தலைசிறந்த நிர்வாகிகளையும் நீதியாளர்களையும் வடபுலத்திற்கு வாரிவழங்கிக்கொண்டிருந்த பிரதேசம் தீவகமாகும்.

யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த கல்லூரி என்று போற்றப்படுகின்ற யாழ். இந்துக்கல்லூரி முதல் மாணவர் விடுதிகளை கொண்ட மத்திய மகா வித்தியாலங்கள் என வடபுலத்தின் கல்வியில் சிகரமாக விளங்கிய அத்தனை பாடசாலைகளின் வளர்ச்சியிலும் தீவக அறிஞர்களின் ஆளுகை வகிபாகம் கணிசமாக இருந்தது என்பதை இவ்விடத்தில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

இவ்வாறாக அறிஞர்களை உருவாக்கிய தீவகத்தில் வேலணை மத்திய கல்லூரி குறிப்பிட்டுக் கூறக்கூடியது.

மருத்துவம், பொறியியல், வர்த்தகம், கலை என அனைத்துத் துறைகளிலும் நாட்டின் பிரபலமான பாடசாலைகளுக்கு ஈடு இணையாக் சாதனை படைத்ததன் காரணமாக தீவகம் என்ற எல்லை கடந்து ஏனைய இடத்து மாணவர்களும் வேலணை மத்திய கல்லூரியில் சேர்ந்து கற்ற வரலாறு பழமையானதல்ல. அதன் நினைவுகளை இப்போதும் மீட்கமுடியும்.

நிலைமை இதுவாக இருந்த தீவகத்தின் சமகால கல்விநிலை ரோம சாம்ராச்சியத்தின் வீழ்ச்சி போல அமைந்திருப்பது வேதனையிலும் வேதனை.

ஆம், இலங்கையில் இருக்கக் கூடிய 96 கல்வி வலயங்களின் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் தரப்படுத்தலில் தீவகம் 96 என்ற கடைசி நிலையில் இருப்பது தாங்க முடியாத துன்பத்தைத் தருகிறது.

ஒரு காலத்தில் வடபுலத்தின் அறிவு என்றிருந்த தீவகத்திற்கு ஏன் இந்த நிலைமை என்று நோக்கும் போது, யுத்தத்தின் கொடூரம் எனக் காரணம் காட்டும்.

1990களில் தீவகம் முழுவதிலுமாக ஏற்பட்ட இடப்பெயர்வும் மீளத்திரும்புதல் என்பதற்கு எடுத்த நீண்ட காலமும் தீவகத்தாரை; யாழ்ப்பாணத்தார், கொழும்பார், வெளிநாட்டார் எனப் பெயர் மாற்றத்திற்குட்படுத்தியது. இதன் காரணமாக தீவகத்தின் கல்விப் பெறுபேற்றின் வீழ்ச்சிநிலை படுமோசமாகியது எனலாம்.

இங்கு தீவகத்தின் கல்வி வீழ்ச்சி பற்றிப் பிரஸ்தாபிப்பது எவரையும் குறைகாண்பதற்காகவல்ல. எத்தனையோ இடர்ப்பாடுகளின் மத்தியிலும் தீவகத்திற்குச் சென்று கல்வி புகட்டுகின்ற ஆசிரியர்களின் பெரும் பணியை நாம் போற்ற வேண்டும்.

மந்தமான மீள்குடி அமர்வு இருக்கக் கூடிய தீவுப் பகுதியில் பாடசாலைகளை இயங்க வைப்பதில் தீவக கல்வி நிர்வாகம் ஆற்றுகின்ற பணியைப் பாராட்ட வேண்டும்.

அதேநேரம் கல்வி மாநாடு இடம்பெறுகின்ற இந்த வேளையில், தீவகத்தின் கல்வியை மேம்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து முன்னுரிமை கொடுங்கள்.

தீவகத்தில் இருக்கக் கூடிய பெற்றோர்கள், மாணவர்கள் மத்தியில் கல்வி பேரெழுச்சியை ஏற்படுத்துங்கள். இதுவேநம் தாழ்மையான கோரிக்கை.

கூடவே தீவகத்தின் மைந்தர்களே! கோயிலை உடைத்து கோபுரம் கட்டாதீர்கள். அங்கே இருக்கக் கூடிய மாணவர்கள்தான் நடமாடும் கோபுரங்கள். அவர்களை கட்டி எழுப்புங்கள். அதுவே உங்கள் பணியாக இருக்கட்டும்.

முதல் நிலையில் இருந்த தீவகம் இன்று இறுதி நிலைக்குச்சென்றதை எழுச்சிகொண்டுமுறியடியுங்கள்.

அனைவரும் ஒன்றிணைந்தால் முடியாதது எதுவுமில்லை என்பதே நாம் தரக்கூடிய உற்சாகமான மூலதனம். இதிலிருந்து தீவகத்திற்கான கல்வி முதலீட்டை ஆரம்பியுங்கள்.

# இலங்கை ஜனாதிபதியை தண்டிக்க ஜெயலலிதா பிரதமராக வேண்டும்

## துணைச் செயலாளர் நாஞ்சில் சம்பத்

(சென்னை)

இலங்கையில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் தமிழர்களை உயிரிழக்க காரணமாகவிருந்த இலங்கை ஜனாதிபதி தண்டிக்கப்பட வேண்டுமானால், இந்தியாவில் பிரதமராக ஜெயலலிதா தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என அ.தி.மு.க. கொள்கை பரப்பு துணை செயலாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல்லில் தேர்தல்பிரசார பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், காவிரி பிரச்சினையில் தமிழர்களின் உரிமை உறுதி செய்யப்படவில்லை. மத்திய அரசில் 8 அமைச்சர்கள் இடம் பெற்றிருந்தும் தமிழகத்துக்கு எதையும் செய்யவில்லை.

இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும், இலங்கை ஜனாதிபதி சர்வதேச குற்றவாளி கூண்டில் ஏற்றப்பட வேண்டும். பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியவர் முதலமைச்சர் ஜெயலலிதா.

இதுபோன்ற தீர்மானத்தை டெசோ மாநாட்டில்கூட கருணாநிதி நிறை வேற்றவில்லை. இலங்கையில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் தமிழர்கள் உயிரிழக்க காரணமாக இருந்த இலங்கை ஜனாதிபதி தண்டிக்கப்பட வேண்டுமானால், இந்தியாவில் பிரதமராக ஜெயலலிதா தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என நாஞ்சில் சம்பத் கூறினார். (2)

# பொலிஸ் அதிகாரிகள் மூவர் பணி நீக்கம்

(கொழும்பு)

சாலியவெவ பொலிஸ் நிலைய அதிகாரிகள் மூவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் தப்பிச் சென்ற சம்பவத்தில் கடமையை செய்யத் தவறிய குற்றச்சாட்டில் இவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற ஒருவர் சாலியவெவ - வீரபுர பகுதியில் இருப்பதாக கடந்த 21-ம் திகதி தகவல் கிடைத்தது.

அதன்பின் குறித்த இராணுவ வீரர் கைது செய்யப்பட்டு அன்றைய தினம் மாலையே தப்பிச் சென்றுள்ளார்.

இராணுவ வீரர் தப்பிச் சென்ற சமயத்தில் கடமையில் இருந்த இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் சார்ஜன் ஆகியோர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (2)

# இலங்கை- அவுஸ்திரேலிய உறவு மேலும் வலுவடையும்

## அமைச்சர் ஸ்கொட் மொரிசன்

ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முயற்சிகளின் அடிப்படையில் இலங்கைக்கும் அவுஸ்திரேலி யாவுக்கும் இடையி லான உறவு மேலும மேம்படும் என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அந்நாட்டின் குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் இந்தக்கருத்தை வெளியிடடுள்ளார்.

ஆட்கடத்தல் விடயத்தில் இலங்கையும் அவுஸ்திரேலியாவும் இணைந்து செயற்படும் போது சட்டவி ரோதமான பல குற்றங்களை தடுக்கக்கூடியதாக இருக்கும் என்று மொரிசன் அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் அவுஸ்திரேலியாவில் இலங்கையர்களின் தொகை 3 ஆயிரத்து 456 இருந்த நிலையில் தற்போது அது 4 ஆயிரத்து 987 ஆக 74 வீதத்தால் உயர்ந்துள் ளது.

இது சட்டரீதியாக தொழில் மற்றும் குடும்பங்களுடன் இணைவு ஆகிய அடிப்படையில் ஏற்பட்ட உயர்வாகும் என்று மொரிசன் குறிப்பிட்டார்.

இதேவேளை, அவுஸ்திரேலி யாவுக்கு வந்த 79 சட்டவிரோத படகுகள் திருப்பியனுப்பப்பட்டதாகவும் மொரிசன் தெரிவித்தார். (2)

# தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

## திருகோணமலையில் நடைபெறும்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான ஒருங்கிணைப்புக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு திருகோணமலை நகராண்மைக் கழக பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் தலைமையுரைகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், வடக்கு மாகாண சபை முதலமைச்சரும்முன்னாள் நீதியரசருமான க.வி. விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண எதிர்க் கட்சி முதல்வர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து ஐ.நா. உரிமைப்பேரவைத் தீர்மானமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடப்பாடுகளும்; உண்மைகள் கண்டறிதல், தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ்மக்களின் குடிப்பரம்பலும் ஆக்கிரமிப்புக்குள்ளான தமிழர் நிலங்களும், போரினால்பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள், அவைதொடர்பானதீர்மானங்களும் நடவடிக்கைகளும் என்பன தொடர்பான கலந்துரையாடல்களும் இடம் பெறும். மாலை அமர்வில் கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்டோரை பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கேட்டுள்ளார். (2)

# அதிகரிக்கும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் போதைப்பொருள் பாவனையினை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு கருத்தரங்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையினை கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வுக்கருத்தரங்கில் போதைப் பொருள பாவனையை கட்டுப்படுத்துவதற்கான் விழிப்புணர்வு கருத்துக்களை. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் நிறைவேற்று பணிப்பாளர் லெசந்திசில்வா சந்திரசேன மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் அத்துல கனேகொட ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

இந்தக் கருத்தரங்கில், சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ்.பொலிஸ் நிலைய பொலிஸார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (2-6)

# சத்திய தரிசனம்



புத்தியின் சக்தி அது முழுமையும் ஒளிமயமானது: நன்மைக்கும் தீமைக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை எவ்வித சுயநலக் கலப்புமின்றி பகுத்துக்கூறுவது.

மனம் என்பது எண்ணங்களின் மூட்டை என நினைக்காதீர்கள். அவ்வாறெனில் இந்த எண்ணங்கள் எங்கிருந்து எழுகின்றன? ஆத்மா தான் எண்ணங்களுக்கு ஆதாரம். அவை சைதன்யத்திலிருந்து எழுகின்றன.

உடலும் மனமும் வெறும் கருவிகள் மட்டுமே. அவை உனது கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இக்கருவிகளை வைத்து உன்னை இனம்காண முயற்சிக்காதே! நீதான் தலைவன்- மனதை உனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து வெற்றிகொள்.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## விளக்கேற்றத்தக்க எண்ணெய்கள்

✦ எல்லாத் தேவைகளுக்கும் நல்லெண்ணெய்யால் விளக்கேற்ற வேண்டும். குலதெய்வத்திற்கு வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், பசுநெய் ஆகிய மூன்றும் கலந்து விளக்கேற்றவேண்டும்.

✦ ஸ்ரீ மகாலெட்சுமிக்குப் பசு நெய்யால் விளக்கேற்ற வேண்டும்.

✦ ஸ்ரீ நாராயணனுக்கு நல்லெண்ணெய் விளக்கேற்ற வேண்டும்.

✦ ஸ்ரீ ருத்திரருக்கு இலுப்பெண்ணெய் விளக்கேற்ற வேண்டும்.

✦ ஸ்ரீ பராசக்திக்கு இலுப்பெண்ணெய், தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், பசுநெய் ஆகிய ஐந்தையும் கலந்து விளக்கேற்ற வேண்டும்.

✦ நல்லெண்ணெய்யால் விளக்கேற்றினால் சகல பீடைகளும் விலகும். கடலை எண்ணெய்யால் விளக்கேற்றக்கூடாது. அப்படி ஏற்றினாற் கடன் தொல்லை, பயம், பீடை, துக்கம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஏழாலை ஸ்ரீ முருகன்


இளவாலை ஹென்றியரசர்

வலி.வலய பாடசாலைகளுக்கிடையிலான

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி; ஏழாலை ஸ்ரீ முருகன் சம்பியன்

வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையிலான 15 வயது உதைபந்தாட்டப் போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலயம் சம்பியனாகியது.

வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

முன்னதாக இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்த போதும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.

இதனால் போட்டியின் முதல் பாதி 0:0 என்னும் கோல் கணக்கில் நிறைவுற்றது.

எனினும் 2 ஆவது பாதியில் கல்லூரி அடுதடுத்து 2 கோல்கலைப் போட்டு 2:0 என இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வென்று முதலாவது அணியாக இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

இடம்பெற்ற 2 ஆவது அரையிறுதியில் ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலயமும் அராலி இந்துக் கல்லூரியும் மோதியது. இப் போட்டியில் ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத்திய ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலயம் கோலொன்றினைப் பெற்றது. தொடர்ந்து இரு அணிகளும் கோல் பெற கடுமையாக முயற்சித்த போது ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலய அணி மேலுமொரு கோலைப் போட்டது. இதனால் போட்டியை 2:0 என்னும் அடிப்படையில் ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலய அணி வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

இறுதிப் போட்டிக்கு முன்னதாக இடம்பெற்ற 3 ஆம் இடத்திற்கான போட்டியில் அராலி இந்துக் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதியது. இப் போட்டியில் 2:0 என்னும் கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வெற்றி பெற்று 3 ஆவது இடத்தைக் கைப்பற்றியது.

இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலய அணியும் மோதியது.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்த போதும் கோல்களை பெற முடியவில்லை. இதனால் முதற்பாதியாட்டம் எந்த வித கோல்களும் பெறாத நிலையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களில் ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலய வீரன் கிடைத்த சந்தர்ப்பத்தை கோலாக்கினார்.

பதிலுக்கு இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் கோல்களைப் பெற முயற்சித்து கோலொன்றினைப் போட்டது.

இதனால் போட்டி 1:1 என நிறைவு பெற சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்டது. இதனை சாதகமாக்கிய ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலய அணி 4 கோல்களைப் பெற்ற போதும் பதிலுக்கு இளவாலை ஹென்றியரசர் கல்லூரியினால் ஒரு கோலையே பெற முடிந்தது. இதனால் இப் போட்டியில் 4:1 என்னும் கோல் கணக்கில் வென்று வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையிலான 15 வயது உதைபந்தாட்டப் போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலய அணி சம்பியனாகியது. (க-23)

சண்டிலிப்பாய் பிரதேச இ.கழக

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி; நவாலி வடக்கு இ.கழகம் வெற்றி

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான இளைஞர் விளையாட்டு விழா 2014 இன் உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டிக்கு சாவற்கட்டு இளைஞர் கழக அணியும் நவாலி வடக்கு இளைஞர் கழக அணியும் தகுதி பெற்றது.

முன்னதாக இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழக அணியும் சாவற்கட்டு இளைஞர் கழக அணியும் மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல் போடுவதற்காக எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்தன.

எனினும் முதல் பாதியின் போது கோல்கள் எவையும் பெறப்படவில்லை. இதனால் முதற்பாதியாட்டம் 0:0 என சமநிலையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதி ஆரம்பித்தவுடன் சாவற்கட்டு இளைஞர் கழக அணி கோலொன்றினைப் போட்டது. பதிலுக்கு இளவாலை ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழக அணி கோல் பெற பல வழிகளில் முயற்சித்தது. போட்டி நிறைவடைவதற்கு சிறிது நேரம் இருக்கையில் கோலொன்றினைப் போட்ட இளவாலை ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழக அணி போட்டியை 1:1 என சமநிலைப்படுத்தியது. ஆட்டம் விறுவிறுப்பை அடைந்ததும் தொடர்ச்சியாக மஞ்சள் அட்டைகளும், சிவப்பு அட்டையும் காண்பிக்கப்பட்டது.

போட்டி நிறைவடைகையில் 1:1 என்னும் அடிப்படையில் இரு அணிகளும் இருந்தமையால் சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்டது.

சமனிலை தவிர்ப்பு உதை மூலம் 1:3 என்ற கோல் அடிப்படையில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழக அணியை வென்று சாவற்கட்டு இளைஞர் கழக அணி இறுதிப் போட்டிக்கு தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

2 ஆவது அரையிறுதி ஆட்டத்தில் பெரியவிளான் இளைஞர் கழக அணியை எதிர்த்து நவாலி வடக்கு இளைஞர் கழக அணி மோதியது.


ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நவாலி வடக்கு இளைஞர் கழக அணி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டு பெரியவிளான் இளைஞர் கழக அணிக்கு அதிர்ச்சியளித்தது.

பதிலுக்கு பெரியவிளான் இளைஞர் கழக அணி கோல் பெற முயற்சித்த போதும் கோல்களைப் பெற முடியவில்லை. இதனால் நவாலி வடக்கு இளைஞர் கழக அணி 2:0 என வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க-23)


வடமராட்சி உதைபந்தாட்ட லீக் வடமராட்சி கல்விவலயத்துடன் இணைந்து செயற்படுத்தும் பாடசாலை உதைபந்தாட்ட அபிவிருத்தி திட்டம் இதன் முதற்கட்டமாக பாடசாலைகளிற்கு பயிற்சி பந்துகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கரவெட்டி கோட்ட கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது. (க-23)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்







நல்லூர் றோட்டரி கழகத்தின் அனுசரணையில் யாழ்.பெனின்சுலா றோட்டராக்ட் கழகத்தினரின் ஏற்பாட்டில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வங்கிகளுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் இலங்கை வங்கியின் பி அணி வெற்றி பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட றோட்டேறியன் ரவினதாஸ் வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் சிறந்த வீரருக்கான கேடயம் வழங்கப்படுவதையும் வெற்றி பெற்ற அணியுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தானை வென்றது சென்னை





ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஐ.பி.எல் லீக் போட்டியில் சென்னை அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

துபாயில் நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரின் லீக் போட்டித்தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை அணியும் ராஜஸ்தான் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி களமிறங்கிய சென்னை அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஸ்மித் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் மக்கலம் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து 28 பந்துகளில் 50ஓட்டங்கள் குவித்த ஸ்மித்தும் பின்னி பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்னர் அடுத்தடுத்த ஓவர்களில் சென்னை அணியின் விக்கெட்டுகள் வீழ்ந்தன. ரெய்னா 4 ஓட்டங்களிலும் தோனி 8 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். பின் வரிசையில் ஜடேஜா 36 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். 20 ஓவர் முடிவில் சென்னை அணி 6 விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்கள் குவித்தது. ராஜஸ்தான் தரப்பில் பாட்டியா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் 141 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் . சென்னை அணியின் நேர்த்தியான பந்து வீச்சால் ராஜஸ்தான் வீரர்கள் ஓட்டம் குவிக்க தடுமாறினர். இதனால் அடுத்தடுத்து விக்கெட் வீழ்ந்தது.



நாயர் 5, ரகானே 15, சாம்சன் 26 , வோட்சன் 7, பின்னி 8 ஆகிய சொற்ப ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர்.

அடுத்து வந்த ஸ்மித் 19 ஓட்டங்களும், பாட்டியா 23 ஓட்டங்களும எடுத்தனர். ஆனால் அதன் பின் வந்த வீரர்கள் அவுட் ஆக ராஜஸ்தான் அணி 19.5 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 133 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் சென்னை அணி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை அணியின் ஜடேஜா தெரிவானார். (க)

## சென்னையின் தலைவர் தோனி மட்டுமே-டு பிளசிஸ்

சென்னை அணியின் அணித்தலைவர் பதவி தோனிக்கு மட்டுமே பொருந்தும் என அணியின் சக வீரரான டு பிளசிஸ் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் அணிகளில் சென்னை மட்டுமே 4 சர்வதேச அணித்தலைவர்கள் உள்ளனர். இந்திய அணியின் அணித்தலைவரான மகேந்திரசிங் தோனி சென்னை அணித்தலைவராக இருக்கிறார். அணியில் மக்கலம் நியூசிலாந்துக்கும், டு பிளசிஸ் தென்னாபிரிக்காவுக்கும், பிராவோ மேற்கிந்திய தீவுக்கும் தலைவராக உள்ளனர்.

இந்நிலையில் சென்னைக்கு டோனி ஒருவரே சிறந்த தலைவர் என்று தெரிவித்தார் டு பிளசிஸ், இது குறித்து கூறுகையில், ஐ.பி.எல் போட்டி தொடங்குவதற்கு முன்பே அணியில் 4 சர்வதேச அணித்தலைவர் இருப்பது பற்றி தான் பேசினோம். இதன் மூலம் அணிக்கு சிறந்த அனுபவம் கிடைக்கும்.

இதில் இந்திய அணியின் அணித்தலைவராக திகழும் தோனியே வலிமையான அணித்தலைவர். அவரது அனுபவத்துக்கு முன்பு நாங்கள் யாரும் இல்லை. நாங்கள் எங்கள் நாட்டு அணிக்குத்தான் அணித்தலைவர். சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு தோனி ஒருவரே தலைவர். (க)

## மஹேல, சங்கா மீது நடவடிக்கை



அதிகாரிகளை விமர்சித்த காரணங்களுக்காக ஜெயவர்த்தன, சங்ககார மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இலங்கை கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது.


இலங்கை அணி சமீபத்தில் இருபது-20 உலகக்கிண்ணத்தை வெல்ல, இலங்கை அணியின் முன்னாள் வீரர்கள் ஜெயவர்த்தன, சங்ககார ஆகிய இருவரது ஆட்டமும் முக்கிய பங்கு வகித்தது.

இருபது-20 உலகக் கிண்ணத்தோடு ஜெயவர்த்தனவும், சங்ககாரவும் 20-ஓவர் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றனர்.

ஓய்வு தொடர்பாக வெளியான தகவல்கள் காரணமாக இலங்கை கிரிக்கெட் சபைக்கும், அவர்களுக்கும் மோதல் உருவாகியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகிகளை இருவரும் கடுமையாக விமர்சனம் செய்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியது.

இது தொடர்பாக ஜெயவர்த்தன, சங்ககார ஆகிய இருவரும் அதிகாரிகள் மீது ஆதாரமற்ற தகவல்களை தெரிவித்துள்ளார்கள், எனவே அவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (க)




## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஈழத்து இராமேஸ்வரம் என விளங்கும் புங்குடுதீவு ஊரதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று காலை 10.00 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினமும நடைபெறவுள்ளது. (எ)

## மகளின் மரணத்திற்கு பாதிரியார்களே காரணம்

### நீதிமன்றில் பெற்றோர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க பாதிரியார் இருவரே தமது மகளின் மரணத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று யாழ்ப்பாணத்தில் சடலமாக மீட்கப்பட்ட யுவதியின் பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

ஜெரோன் கொன்சொலீட்டா என்ற இந்த யுவதியின் தாயார் நேறறு யாழ்ப்பாண நீதிமன்றத்தில், சாட்சியமளிக்கையில இந்தக்குற்றச்சாட்டை சுமத்தினார்.

ஒரு சந்தர்ப்பத்தில், குறித்த இரண்டு பாதிரிமாரும் தமது மகள் மீது காதல் கொண்டுள்ளமை தெரியவந்ததாக தாயார் தெரிவித்தார்.

தமது மகளின் தொலைபேசி உரையாடலை கேட்ட தாம் அது தொடர்பில் மகளை விசாரித்த போது, குறித்த இரண்டு பாதிரிமாரும் தம்மை திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்பதாகவும் அதில் ஒருவர் பயமுறுததுவதாகவும் மகள் தெரிவித்ததாக கொன்சொலீட்டாவின் தாயார் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் வெளியில் புறப்பட்டு சென்ற தமது மகள் வீடு திரும்பவில்லை என்று தாயார் கூறினார்.

இதேவேளை தமது மகள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்ட கொன்சொலீட்டாவின் தந்தை, இரண்டு பாதிரியார்கள் மீதும் குற்றம் சுமத்தினார்.

வழக்கு விசாரணை நேற்று நண்பகல் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சிவகுமார் முன்னிலையில் இடம்பெற்றுள்ளது.

விசாரணையில் குற்றம் சாட்டப்பட்ட பாதிரியார் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

எனினும் பெற்றோர்களின் சாட்சியங்கள் மன்றில் பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து உயிரிழந்த யுவதி பயன்படுத்தியதாக கூறப்படும் கையடக்கத் தொலைபேசியினை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன் மேலதிக வழக்கு விசாரணை எதிர்வரும் 12-ம் திகதி நடைபெறும் எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (செ-4)

## சர்வதேச...

கம் புலி முத்திரை குத்தி வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் இலங்கை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு அமைய நடத்தப்பட உள்ள சர்வதேச விசாரணைகளில் இருந்து தன்னை விடுவித்து கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இலங்கையில் தற்போது எந்த பயங்கரவாதமும் இல்லை. 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டில் தீவிரவாதம் முடிவுக்கு வந்தது.

விடுதலைப் புலிகளின் தீவிரவாதத்தை முற்றாக முடிவுக்கு கொண்டு வந்து விட்டதாக அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் கூறியிருந்தது. எனினும் மீண்டும் பயங்கரவாதம் பற்றிய அறிக்கையை வெளியிட்டு அரசாங்கம் மீண்டும் தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள சிரமமான நிலையில் இருந்து தப்பிக்க, மக்களை அச்சுறுத்தி சர்வதேசத்திற்கு முன்னால் பொய்யான நாடகத்தை ஆடி வருகிறது.

அப்பாவி தமிழ் மக்கள் மீது புலி முத்திரை குத்த அரசாங்கம் எடுத்து வரும் முயற்சி[illegible] டியாக கைவிட வே[illegible].

போர் முடிந்து 5 வருடங்கள் கழிந்துள்ள நிலையில், பயங்கரவாத அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அவர்களை சிறையில் அடைப்பது எந்த வகையில் நியாயமாகும்.

அரசாங்கத்தின் இப்படியான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டால், காணப்படும் பிரச்சினைகள் அதிகரிக்குமே அன்றி குறையாது.

சர்வதேச பொலிஸார் தேடி வரும் விடுதலைப் புலிகள் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் என்று கூறி நாட்டில் விடுதலைப் புலிகள் மீண்டும் ஒருங்கிணைந்து [illegible] எனவும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.(செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சங்களைக் கொடுத்துவிட்டுக் காத்திருந்து ஏமாறாமல்
வெறும் 30,000/-* உடன் பயணத்தை ஆரம்பியுங்கள்!
100% எழுத்து மூல உத்தரவாதத்துடன்
Student Visa & Work Permit ஏற்பாடு
3 மாதம் வெளிநாட்டில் தொழிற்பயிற்சியைப் பூர்த்தி செய்து
UK, New Zealand, Australia, Switzerland மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல புதிய வாய்ப்பு
அனைத்துச் சேவைகளுக்கும் 3 வருட சேவை உத்தரவாதம்
FREE OFFER | அனுமதி பெறும் அனைவருக்கும் 3 மாத கால ENGLISH THE EASYWAY ஆங்கிலக் கற்கைநெறி முற்றிலும் இலவசம்
* இன்று(24)ம், நாளை(25)யும் மட்டுமே இந்தச் சலுகை
Sikaram TakeOff your dreams கனவுகளுக்கு இறக்கை கட்டுவோம்
மேலதிக விபரங்களுக்கு: www.sikaram.lk
முற்பதிவு: 077 36 16 798
சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி
இல.153, பலாலி வீதி, கந்தரமடம், யாழ்ப்பாணம்
(C-7142)

# மோடியும் அல்ல, லேடியும் அல்ல என் டாடிதான் காரணம்

## மு.க.ஸ்ராலின் தேர்தல் பன்ச்



(சென்னை)

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளுக்குக் காரணம் மோடியும் இல்லை, தமிழகத்தின் லேடியும் இல்லை. எல்லாவற்றிற்கும் காரணம் என் டாடி கருணாநிதியே என தி.மு.க. பொருளாளர் ஸ்ராலின் தக்கோட்டை தேர்தல் பிரசாரத்தில் பேசினார்.

அண்மையில் தென்சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், குஜராத்தின் மோடி, தமிழகத்தின் லேடி இருவரில் யார் சிறந்த நிர்வாகி என்று ஆதரவாளர்களைக் கேட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதா, அனைத்து துறைகளிலும் மிகச் சிறந்த நிர்வாகத்தை அளித்துக் கொண்டிருப்பவர் குஜராத்தின் மோடி அல்ல தமிழ்நாட்டின் இந்த லேடிதான் என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இதற்கு பதிலளிக்கும் வகையில் ஸ்ராலின் தனது இறுதிகட்ட பிரசாரத்தில் பேசியது தொண்டர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் பெரும வரவேற்பை பெற்றது. (செ-11)

# வட மாகாண சபை உறுப்பினராக தவராசா நேற்று சத்தியப்பிரமாணம்



(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தெரிவான சின்னத்துரை தவராசா நேற்று புதன்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் மாகாண சபை உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

வடமாகாண சபையில் வெற்றிடமாக இருந்த உறுப்பினர் பதவிக்குத் தெரிவான சின்னத்துரை தவராசா நேற்று மாலை 5 மணியளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இதன் போது, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுனர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் மாகாண சபை உறுப்பினர் தவநாதன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (செ-6)

## வாள்வெட்டுக்கு இலக்...

யில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் இவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையிலேயே இவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மல்லாகம் பகுதியில் அதேதினத்தில் மூன்று இளைஞர்கள் மீது முகங்களை துணியினால் மூடிக் கொண்டு வந்த குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த அம்மூன்று இளைஞர்களும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தெல்லிப்பழை பொலிஸாரும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை சேர்ந்தவர்களும் இணைந்து சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு இசை நிகழ்ச்சியை மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடத்தினர். இதன்போது, இரு குழுவினருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடே இத்தாக்குதல் சம்பவங்களுக்கு காரணமென்று தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் எவரும் இதுவரையிலும் கைது செய்யப்படவில்லையென தெல்லிப்பழை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளினை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர். (செ-6)

## இராணுவ...

திகள் உரிமையாளர்கள் வைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

யுத்த மோதல்கள் காரணமாக இறம்பைக்குளம் கிராமத்து மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தனர்.

யுத்தம் முடிவுக்கு வந்து இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செயயப்பட்டுள்ள போதிலும், ஓமந்தை இராணுவ சோதனைச்சாவடி அமைந்திருக்கும் சூழலில் உள்ள தமது காணிகளைத் திருப்பித் தரவேண்டும் என்று பலமுறைகள் கோரிக்கை விடுத்தும் பலனளிக்காத நிலையிலேயே இப் போது, அந்தக் காணிகளை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இராணுவத்தை வடக்கில் இருந்து வெளியேற்ற வேண்டும், ஓமந்தை இராணுவ சோதனைச்சாவடியை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் இராணுவ தேவைக்காக பொதுமக்களின் காணிகளை இவ்வாறு கையகப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தாக்குதலுக்குள்ளான...

பூட்டி விட்டு மோசமாக தாக்கியுள்ளார்.

இந்த தாக்குதலின் மூச்சுவிடுவதற்கு சிரமப்பட்ட கைதி சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த ஒரு வாரமாக சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பான விசாரணைகளினை யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்டு வருகின்றார்.

இதேவேளை குறித்த கைதியினை தாக்கிய யாழ். சிறைச்சாலை காவலர் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகரால் ஏற்கெனவே பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கைதியினை தாக்கி அவரது மரணத்திற்கு காரண மாகயிருந்ததாக குற்றம்சாட்டப்பட்ட சிறைக காவலரை 14 நாட்கள விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்த குறித்த கைதி உயிரிழந்ததையடுத்து, கைது செய்யப்பட்ட சிறைக் காவலர் நேற்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார். (செ-6,4)

மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு – மதுரை | – 15800 | RTN |
| கொழும்பு – சென்னை | – 19900 | RTN |
| கொழும்பு – திருச்சி | – 22000 | RTN |
| கொழும்பு – பெங்களூர் | – 23300 | RTN |
| கொழும்பு – டோகா | – 26000 | O/W |
| கொழும்பு – மாலைத்தீவு | – 29900 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | – 30200 | RTN |
| கொழும்பு – லண்டன் | – 70100 | O/W |
| கொழும்பு – பிரான்ஸ் | – 66600 | O/W |
| கொழும்பு – மலேசியா | – 30000 | RTN |
| கொழும்பு – சுவிஸ் | – 112500 | RTN |
| கொழும்பு – கனடா | – 105700 | O/W |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
#128, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0214 920 920
(C-7140)

## பொது பல...

தோன்றுகிறது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அலுவலகத்துக்குள் நேற்று புதன்கிழமை காலை பொது பல சேனா அமைப் பினர் நுழைந்து மாற்றுக் கருத்துடைய ஒரு புத்தபிக்குவை தேடியதால் பெரும் பிரச்சினை ஏற்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் இதில் தலையிட்டனர்.

பொது பல சேனாவின் உறுப்பினர்கள் நேற்று அமைச்சர் ரிஷாத்தின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்துக்குள் அத்துமறி நுழைந்ததாக அமைச்சு தரப்பினரால் குற்றஞ்சாட்டப் பட்டுளளது.

மேலும் தமக்கு எதிராக செயல்படும் அமைப்பான ஜாதிக பல சேனாவைச் சேர்ந்த புத்தபிக்கு வட்ட்ரக்க விஜித தேரர் அந்த அமைச்சக அலுவலகத்தில் ஒளிந்திருப்பதாகக் கூறியபடி பொதுபல சேனா அமைப்பினர் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்துக்குள் புகுந்தனர் என்று அமைச்சக அதிகாரிகள் பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளனர்.

வட்டரக்க விஜித தேரர் மட்டுமல்ல யார் வேண்டுமானாலும அமைச்சர் என்கிற முறையில் தன்னை சந்திக்க முடியும், அதை பொது பல சேனா உட்பட யாரும் தடுக்கவும் முடியாது அதை கேட்பதற்கு உரிமையும் கிடையாது என் ரிஷாத் பதியுதீன் கூறினார்.

அத்தோடு இந்தச் சம்பவம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகவும் வேதனைப்பட்டதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஆனால் பொது பல சேனா அமைப்பினரோ ஜாதிகபல சேனாவைச் சேர்ந்த வட்டரக்க விஜித தேரர் இஸ்லாமியர்களுக்கு, ஆதரவாக செயல்படுகிறார் எனக் குற்றஞ் சாட்டுகின்றனர்.

ஜாதிகபல சேனாவின் பிக்கு தமது மதத்துக்கும் தேசத்துக்கும் கேடு விளைவிக்கிறார் என பொது பல சேனா கூறுகிறது.

அவர் அவ் வாறு செய்யக் கூடாது என நேரில் சந்தித்து அறிவுறுத்துவதே தமது நோக்கம் எனவும் பொது பல சேனாவினர் கூறுகிறார்கள்.

இதனிடையே பொதுபல சேனா அமைப்பின் பிரதிநிதிகள், ராவண பாலய அமைப்பினர் மற்றும் தேசிய பிக்குமார் சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நாட்டின் அதிஉயர் பௌத்த பீடாதிபதிகளில் ஒருவரான மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கலத் தேரரை சந்தித்து பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது, நாட்டில் பௌத்த மதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் இடம்பெறு வதாகவும், அது குறித்து அரசு மௌனம் காப்பதாகவும் அவர்கள் மல்வத்த பீடாதிபதியிடம் தெரிவித்துள்ளனர். (செ-11)

## இளைஞர்...

வருடங்களாக தமிழ் இனவாத பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை கைவிடவில்லை.

மூன்று தசாப்த போருக்கு பின்னர் தமது வாழ்வை கட்டியெழுப்ப முயற்சிக்கும் வடக்கில் அப்பாவி தமிழ் மக்களுக்கு தேவையான நலன்புரி தேவைகள உட்பட தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க கூட்டமைப்பு குரல் கொடுக்கவில்லை. வட பகுதி தமிழர்களின் மத்தியில் தமிழ் இனவாத பிரிவினைவாத நிலைப்பாடுகளை வேரூன்ற செய்யும் வகையிலேயே கூட்டமைப்பு கடந்த காலங்களில் செயற்பட்டு வந்துள்ளது.

சுமந்திரன் போன்றோர் வடக்கில் பிரிவினைவாத இனவாத விஷத்தை ஊட்ட முயற்சித்ததுடன் புலம்பெயர் தமிழர்கள் தமிழீழத்திற்காக எந்த விலையை கொடுக்கவும் தயாராக இருந்தனர்.

அழிவை ஏற்படுத்தும் இந்த செயற்பாட்டின் பிரதிபலனாக புலிப் பயங்கரவாதம் வடக்கில் மீண்டும் தலைதூக்கும் நிலைமையை காணமுடிந்துள்ளது.

பிரிவினைவாத புலிப் பயங்கரவாதத்திற்கு மீண்டும் உயிரூட்ட கடந்த 5 வருடங்களாக முயற் சித்து வரும் சுமந்திரன் போன்றோர், அரசாங்கம் புலி நாடகத்தை அரங்கேற்றி வருவதாக சுமத்தும் குற்றச்சாட்டு அருவருக்கத்தக்கது எனவும் மொஹமட் முஸம்மில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

தேவை Wanted
We need you உங்களுக்கு விருப்பமா? எங்களுடன் இணைந்து 40,000/= மேல் உழைக்க யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசத்தினர் விரும்பத்தக்கது.
we will train you. until you succeed vacancies
✦ management Trainee ✦ Customer Service ✦ Marketing ✦ Administrator
தகைமை:-O/L, A/L வயது 18-30 ஆண், பெண் இருபாலாரும் தங்குமிட வசதி இலவசம்.
அழைக்க: 0772302795, 0774567438, 0775566224
(C-7139)

பொமனேரியன் நாய்கள் விற்பனைக்கு
1½ வயது நிரம்பிய ஆண், பெண் சிங்க கட்டை இன பொமனேரியன் கறுப்பு நிற நாய்கள் விற்பனைக்குண்டு,
தொடர்பு :- 077 910 7153
A.G.செல்வம்
107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
(6208)

## தவறவிடப்பட்டுள்ளது

இலட்சுமணன் முகுந்தன் என்பவரது 9015 22545V இலக்கமுடைய அடையாள அட்டை, ரொக்கப்பணம், ATM அட்டை என்பன இயக்கச்சிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு :- 0779798336

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org